# வருடாந்த அறிக்கை

## கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

## 2023



சொத்தாண்மையைப் பாதுகாத்து

நிலைதளராத வலிமையுடன் முன்நோக்கி



20

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நோக்கு

நாட்டின் வீடமைப்புத் தேவைக்கான
தீர்வாக கூட்டாட்சி குடியிருப்புகளை
உருவாக்க உதவுதல்.

# MISSION

கூட்டாட்சி ஆதனங்களின்
குடியிருப்பாளர்களின் நன்மைகளுடனும்
நலனோம்பலுடனும் ஒத்துவரக்கூடியவாறு
நிர்மாணித்தல் மற்றும் இந்த ஆதனங்களை
முறையாக நிர்வகிப்பதற்காகவும்
முகாமைசெய்வதற்காகவும் முகாமைத்துவக்
கூட்டுத்தாபனங்களை தாபித்து மேற்படி



# சொத்தாண்மையைப் பாதுகாத்து நிலைதளராத வலிமையுடன் முன்நோக்கி

இரண்டு தசாப்தங்களாக கூட்டாதனங்களுக்கான அரசாங்க அதிகாரசபையென்றவகையில் நாங்கள் இதுவரை பெற்றுள்ள வலிமையானது எந்தவொரு சவால்நிறைந்த சுற்றுச்சூழலிலும் கூட்டாதனத் துறையின் உரிமைகளை பாதுகாத்து, நிலைதளராத வலிமையுடனும் திடசங்கற்பத்துடனும் தரப்பினர்களுக்கு அவசியமான சக்தியையும் ஒழுங்குறுத்தலையும் வழங்கியுள்ளது. நிலைபெறுதகு அபிவிருத்தியின் பாதுகாப்பான நிழல் தேவைப்படுகின்ற ஒரு நாட்டில் தொடர்மாடி வீடமைப்பு வாழ்க்கைப் பாங்கிற்காகவும் கட்டுமானத்துறையின் புத்துணர்ச்சிக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் மேற்சொன்ன இலக்குகளை அடைய அவசியமான பலத்தை பெறுவதற்காக நாங்கள் நித்தமும் எழுச்சிபெறுகிறோம். பொருளாதாரத்திற்கு மீண்டும் உயிர்கொடுக்கவும் கூட்டாட்சி ஆதன அபிவிருத்தியின் மறுமலர்ச்சி கருதியும் அவசியமான அனைத்து தரப்பினருக்கும் நாங்கள் எமது நெகிழ்வுத்தன்மைமிக்க சேவையை குறைவின்றி வழங்கியுள்ளோம். மூலோபாயத் திட்டங்கள் ஊடாக நிதி மற்றும் பௌதீக இலக்குகளையும் சவால்நிறைந்த சுற்றுச்சூழலைச் சவாலெனக் கருதாமல் வெற்றிகண்ட நாங்கள் எதிர்கால அபிவிருத்தியின் பங்காளிகளாக எமது பொறுப்பினை சிறப்பாக ஈடேற்றுகின்ற செயற்பொறுப்பினை நிறைவுசெய்கின்ற பெருமையை முதன்மையாகக்கொண்டே தொடர்ச்சியாக தோற்றி வருகிறோம்.



# பொருளடக்கம்


நோக்கும் அரும்பணியும / 01

இந்த அறிக்கை சம்பந்தமாக

2023 வருடாந்த அறிக்கை / 04

கூட்டாட்சி ஆதனம் சம்பந்தமான சட்டங்கள / 05

கூட்டாட்சி வரலாறு – நிகழ்காலம / 06

தலைவரின் செய்தி / 07

பொதுமுகாமையாளரின் மீளாய்வு / 09

தாபனம்சார் மொத்தப் பகுப்பாய்வு

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் பணி-ப்பாளர்சபை / 10

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் தாபனம்சார் முகாமைத்துவம / 12

நோக்கங்கள/ 13

தத்துவங்கள / 14

நிதிசார் முன்னேற்றம / 15

ஊழியர், வாடிக்கையாளர் மற்றும் சமூகம்சார் பொறுப்பு / 16

அலுவலகக் கட்டமைப்பு / 17

நிர்வாக அறிக்கை

கூட்டாட்சி கருத்திட்டங்களுக்கான அங்கீகாரமும் சான்றிதழ் விநியோகமும / 18

2023 ஆம் ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட கூட்டாதன சான்றிதழ்கள / 19

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுதல், கட்டமைப்பு, பொறுஜ;புகள் மற்றும் தத்துவங்கள் / 20

வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் கூட்டாட்சி முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு / 22

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு வலுவளித்தல / 23

2005 – 2023 வரை இலங்கையில் வியாபித்துள்ள அரச மற்றும் தனியார் கூட்டாட்சிக் கூறுகள / 24

சட்டப் பிரிவின் செயற்பொறுப்பு / 25

சட்டப் பிரிவில் முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு / 26

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள / 27

ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் நிகழ்கால ஊழியர் மதிப்பீடு / 28

தாபனம்சார் திட்டம் / 30

2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மீளாய்வு அறிக்கை / 31

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள / 35

நிதிக் கூற்றுகள /37

பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை /41

ஏனைய விடயங்கள /42

நிதிசார் அறிக்கைகள் / 43

2023 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று /44

நிதிசார் செயலாற்றுகைகள் கூற்று /46

ணிக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் /47

நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள் /52

நிதிசார் கூற்றுக்கான அட்டவணைகள் /59

தேறிய சொத்துக்கள் உரிமைப் பங்குகள் மாற்றமடைதல் பற்றிய கூற்று /62

2023.12.31 ஆந் திகதியிலான காசுப் பாய்வுக் கூற்று /63

பாதீடுசெய்த மற்றும் உண்மையான பெறுமானங்களின் இணக்கப் பதிவேடு /64

# வருடாந்த அறிக்கை 2023

## கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

பாவனையின் வசதிக்காகவும் கணக்காய்வு மற்றும் கணக்குக்கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மை கொண்டதாக வெளியிடப்படவேண்டும் என்பதற்காகவுமே 2022 வருடாந்த அறிக்கையானது சொத்தாண்மையைப் பாதுகாத்து நிலைதளராத வலிமையுடன் முன்நோக்கி எனும் தொனிப்பொருளில் ஆக்கப்பட்டுள்ளது.

2023 வருடாந்த அறிக்கை 2020 ஓகத்து மாதம் அமைச்சரவை அலுவலகம் மூலமாக வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கோவையைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க அதன் 3 (ஓஜஜ) இல் அடங்கியுள்ள பின்வரும் விடயங்கள் 2023 வருடாந்த அறிக்கை மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(அ) ஏற்புடைய கால எல்லைக்கான நிறுவனத்தின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

(ஆ) எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயலாற்றுகையை விருத்தி செய்வதற்காக கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள குறுங்கால மற்றும் மத்தியகால வழிமுறைகள்

(இ) வருடாந்த அறிக்கை சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை திருத்திக்கொள்வதற்காக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினாலும் அதன் பணிப்பாளர் சபையினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வழிமுறைகள்

(ஈ) அமைச்சரவையின் கவனம் செலுத்தப்படவேண்டிய நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள், அத்துடன் பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களம் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருடாந்த அறிக்கைகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் கணக்குக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடல் காலஎல்லை

சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதிசார் அறிக்கையுடன் தொடர்புடைய நிதிசாரா தகவல்களும் அதனோடு தொடர்புடைய ஏனைய அறிக்கையிடல்களும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும். வெளித்தரப்பினர்களும் தொழிற்பாட்டு முகாமைத்துவமும் உள்ளிட்ட கூட்டிணைவு அறிக்கையிடல் அறிக்கைகள் விடயப்பரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கையிடல் வட்டமானது 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ஒப்பீட்டுரீதியாகவே உருவாக்கப்பட்டுள்ளது. அதன் நிதிசாரா தகவல்களுக்காக அளவுசார் ரீதியான சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை.

### அளவுசார்ரீதியான தன்மை

முகாமைத்துவ தொழிற்பாட்டுப் போக்குகள் கூட்டாட்சி ஆதன வீடுகளில் வசிப்பவர்கள், ஆதன அபிவிருத்தியாளர்களின் அவசியப்பாடுகள் மற்றும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் மூலோபாயத் திட்டங்களை கவனத்திற்கொண்டு இந்த கூட்டாண்மை அறிக்கையில் உள்ளடங்கவேண்டிய







இந்த QR குறியீடு மூலமாக அறிக்கையை இணையவழியில் பாவ-

நிர்மாணிப்பும் வடிவமைப்பும்
ஜீ.ஏ.யூ.ரி. சம்பத்
பிரவினி விஜேசிங்க
முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

# கூட்டாட்சி ஆதனத்துடன் தொடர்புடைய சட்டங்கள்






### 1970 இன் 12 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி ஆதனங்கள் சட்டம்

கூட்டாட்சி ஆதனத்துடன் தொடர்புடைய திட்ட வரைபடத்தையும் வெளிப்படுத்தலையும் பதிவுசெய்தல், கட்டிடங்களை இணைந்த பாகங்களாக மீண்டும் பிரித்துதொதுக்குதல், இருப்பிடக்கூறு சம்பந்தமான தனிப்பட்ட உரிமையைப் பெற்றுக்கொள்ளல், உரிமையை கைமாற்றுதல், பாவனை மற்றும் முகாமைத்துவம் அத்துடன் கூட்டாட்சி ஆதனங்கள் பதிவுசெய்யப்பட்ட பின்னர் தமது ஆதனத்தின் உரிமையாளர்கள் கூட்டிணைக்கப்பட்ட ஒரு சபையாக மாறுவார்கள் என்பதற்கான சட்டமுறையான ஏற்பாடு இந்த சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

### 1973 இன் 11ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம

1973 இன் 01 ஆம் இலக்க ஆதன உச்சவரப்பு சட்டம் மூலமாக தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட தொடர்மாடி மற்றும் இணைந்த வீடுகளின் கட்டுப்பாட்டுக்கான பரவலாக தத்துவங்கள் கையளிக்கப்படுகின்றவகையில் 1973 இன் 11 ஆம் இலக்க சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது அமுலுக்கு வந்ததும் 1970 இன் 12 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச்சட்டம் நீக்கப்பட்டதோடு அதன் 11 வது பிரிவில் காட்டப்பட்டிருந்த கூட்டாட்சி ஆதனமொன்று பதிவுசெய்யப்பட்டதும் உடனடியாக கூட்டாட்சி ஆதனக் கூட்டுத்தாபனமொன்று உருவாகும் என்கின்ற ஏற்பாட்டுக்குப் பதிலாக கூறுகளின் உரிமையாளர்களுக்கு மேற்படி ஆதனத்திற்குரிய அம்சங்களை கட்டுப்படுத்துதல், முகாமைசெய்தல், பராமரித்தலுக்காக அந்த கூறுகளின் உரிமையாளர்களைக் கொண்டமைந்த சங்கத்தை அல்லது சபையை நிறுவிக்கொள்வது சட்டமுறையானதாகும் எனும் ஏற்பாடு செய்யப்பட்டது.

### 1982 இன் 45 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டம்

1982 இன் 45 ஆம் இலக்க சட்டத்தினால் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் வழிமுறை அறிமுகஞ் செய்யப்பட்டதோடு முகாமைத்துவ சபைகளை பலப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பொறுப்பு, தத்துவங்கள், முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்காக நிர்வாகியொருவர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுகின்ற தத்துவங்கள், கூட்டாட்சி ஆதனங்களை காப்புறுதிசெய்தல் போன்ற தத்துவங்கள் இந்த திருத்தங்கள் மூலமாக சட்டத்தில் சேர்க்கப்பட்டன.

### 1999 இன் 04 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச்

1973 இன் 01 ஆம் இலக்க ஆதன உச்சவரப்பு சட்டம் மூலமாக தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட தொடர்மாடி மற்றும் இணைந்த வீடமைப்புத் திட்டங்கள் 1979 இன் 17 ஆம் இலக்கமுடைய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின்படி நிர்மாணிக்கப்பட்ட ஒருசில கூட்டாட்சி வீடமைப்புத் திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விதிமுறைகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமைந்தொழுகாமையும் அவசியமான ஆவணங்கள் இன்மையாலும் இசைவுச் சான்றிதழை வழங்க உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முடியாத நிலை காணப்பட்டது.

### 2002 இன் 27 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

1999 இன் 04 ஆம் இலக்கமுடைய சட்டத்தில் அதில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஈடேற்றிக்கொள்வதற்காக இரண்டு வருடகாலம் வழங்கப்பட்டிருந்ததோடு 2011 மார்ச் 09 ஆந் திகதியுடன் அந்த இரண்டு வருடகாலம் முடிவடைந்தபோதிலும் காணியைக் கைமாற்றுதிலான சிக்கல்கள், கூட்டாட்சித் திட்டவரைபடங்களை தயாரிப்பதிலான சிக்கல்கள் தீர்க்கப்பட்டிராமை காரணமாக மேற்படி கூட்டாட்சி ஆதனங்களின் உரிமையைக் கைமாற்ற முடியாமல் போயிற்று. அதனால் அந்த பணிகளை ஈடேற்றிக்கொள்வதற்கான அதிகாரத்தை வழங்கி 2002 இன் 27 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது.

### 2003 இன் 24 ஆம் இலக்கமுடைய பொது வசதிகள் சபை (திருத்தம்) சட்டம்

கூட்டாட்சி ஆதனமொன்று நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அதனோடு தொடர்புடைய கூட்டாட்சித் திட்டவரைபடம் மற்றும் வெளிப்படுத்தலை பதிவுசெய்வித்தல், அவ்விதமாக பதிவுசெய்துகொள்ள முன்னர் மேற்படி ஆதனத்தின் பொதுஅம்சங்களுக்கான சான்றிதழை வழங்குதல், பதிவுசெய்தபின்னர் உருவாகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து அலுவல்களையும் ஒழுங்குறுத்துதல், கூட்டாட்சி ஆதனத்தின் பல்வேறு தரப்பினர்களுக்கிடையில் பொதுவான ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், அத்துமீறிய கட்டுமானங்களை அகற்றுதல், ஆதனங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான அனைத்துவிதமான தத்துவங்களையும் கொண்டதாக அமுலாக்கப்பட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையைத் தாபித்து 1973 இன் 10 ஆம் இலக்கமுடைய பொது வசதிகள் சபை சட்டத்தை 2003 இன் 24 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் திருத்தியமைத்ததோடு அந்த சட்டத்தின் மூலமாகவே கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் நிறுவப்பட்டது.

### 2003 இன் 39 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டம்

கூட்டாட்சி ஆதனமொன்று பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்வதற்காக தற்காலிக கூட்டாட்சி ஆதனம், பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் மற்றும் முழுமையான கூட்டாட்சி ஆதனம் என்ற வகையில் 03 சந்தர்ப்பங்களில் பதிவுசெய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 2003 இன் 39 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டம் நிறைவேற்றப்பட்டது.

### 2018 இன் 23 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச்




இலங்கையில் தொடர்மாடி விடுகள் சம்பந்-தமான முதலாவது சட்டம்.

# கூட்டாட்சி

## வரலாறு - நிகழ்காலம்

### கூட்டாட்சி வீடமைப்பின் திருப்புமுனைகள் 1959 - 2023



**1959** இலங்கையின் வீடமைப்புச் சிக்கல் சம்பந்தமாக கற்றாராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டமை.




**1963** இலங்கையின் வீடமைப்புக் கொள்கை சம்பந்தமான முதலாவது கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டமை.

**1970** 1970 இன் 12 ஆம் இலக்க கூட்டாட்சி ஆதன சட்டம் மூலமாக கூட்டாட்சி ஆதனமொன்று சம்பந்தமான சட்ட ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

**1973** 1973 இன் 01 ஆம் இலக்க ஆதன உச்சவரப்புச் சட்டத்தினால் தொடர்மாடி மற்றும் இணைந்த வீடுகளின் நிருவாகத்திற்கான விரிவான தத்துவங்கள் கையளிக்கப்படத்தக்கதாக 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக 1972 இன் 12 ஆம் இலக்க சட்டம் நீக்கப்பட்டதோடு தொடர்மாடி வீடமைப்புக் கூறுகளின் உரிமையாளர்களைக் கொண்டமைந்த சங்கமொன்றை அல்லது சபையினை தாபித்தல் சட்டமுறையானதென ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அத்துடன் மேற்படி ஆதனங்களின் பராமரிப்பிற்காக பொது வசதிகள் சபையினை நிறுவுதல் 1973 இன் 10 ஆம் இலக்க சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது.



**1982** முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் திட்டம் 1982 இன் 45 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத் திருத்தத்தினால் அறிமுகஞ் செய்யப்பட்டதோடு முகாமைத்துவக் கூட்டுத்தாபன திட்டத்தை பலப்படுத்துவதற்கான தத்துவங்கள் மேற்படி சட்டத்தில் அடக்கப்பட்டிருந்தன.



**2003** கூட்டாட்சி ஆதனங்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் கூட்டாட்சித் திட்ட வரைபடத்தையும் வெளிப்படுத்துதலையும் பதிவுசெய்வித்தல், அவ்விதமாக பதிவுசெய்ய முன்னர் மேற்படி ஆதனத்தின் பொதுவான அம்சங்களுக்கான சான்றிதழை வழங்குதல், பதிவுசெய்த பின்னர் உருவாகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பணிகளினதும் ஒழுங்குறுத்தல், கூட்டாட்சி ஆதனத்தின் பல்வேறு தரப்பினர்களுக்கிடையில் பொது ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற பிணக்குகளை தீர்த்துவைத்தல், அத்துமீறிய கட்டுமானங்களை அகற்றுதல், ஆதனங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான அனைத்து தத்துவங்களையும் கொண்டதாக அமுலாக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையை நிறுவி 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபைச் சட்டம் 2003 இன் 24 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதோடு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை அந்த சட்டத்தின் மூலமாகவே நிறுவப்பட்டது. மேலும் கூட்டாட்சி ஆதனமொன்று தற்காலிக, பகுதியளவிலான மற்றும் முழுமையான என்றவகையில் 03 கட்டங்களில் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட வாய்ப்பு வழங்குவதற்காக 2003 இன் 39 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டம் நிறைவேற்றப்பட்டது.



**2017** கூட்டாட்சி சான்றிதழ்களை வழங்குவதற்காக நிறைவேற்றியிருக்கவேண்டிய அடிப்படை தேவைகள், அமைந்தொழுகல்கள் மற்றும் பிரமாணங்களுக்கான கட்டணங்கள் போன்றே விண்ணப்பப் பத்திரங்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கியதாக 2017 யூலை 05 இன் 2026/25 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டது.



# தலைவரின் செய்தி

“ சவால்நிறைந்த நிலைமையிலும்கூட கூட்டாட்சி ஆதனத்துறையின் முன்னோடி என்றவகையில் நோக்கங்களையும் நிதிசார் சவால்களையும் வென்றுள்ளோம். நாம் கொண்டுள்ள ஊழியர் குழாத்தின் ஊக்கமும் நம்பிக்கையுமே அதற்குக் காரணமாகும். ”

2022 ஆம் ஆண்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக சுருங்கிய பொருளாதாரம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட அனைத்தும் 2023 ஆம் ஆண்டில் இயல்புநிலையை அடையுமென நாமனைவரும் ஊகிப்பின்றி எதிர்பார்த்தோம். எனினும் அத்தகைய சவால்நிறைந்த சுற்றுச்சூழலில்கூட பொது திறைசேரிக்கு தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக பங்களிப்பினை வழங்க இயலுமானமை பற்றி நான் தன்னடக்கத்துடன் பெருமைப்படுகிறேன்.

இந்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கிய ஏற்பாடுகளிலிருந்து கணிசமான அளவு பொதுமக்கள் நலனோம்பல் மற்றும் சுகாதார துறைக்காக ஈடுபடுத்தப்பட்டது. சாதகமான சுகாதார நிலைமையைக்கொண்ட மானிட சமுதாயம் ஊடாக அபிவிருத்தி இலக்குகளின் குறிக்கோள்களை இயல்புநிலைக்கு கொண்டுவருவதே இதன் எதிர்பார்ப்பாக அமைந்தது. கட்டுமானத்துறையில் முதன்மை இடமாக அமைந்த கூட்டாட்சி விடயப்பரப்பிற்குள்ளேயும் 2023 ஆம் ஆண்டில் கணிசமான வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் எதிர்பாராதவிதமாக 2022 ஆம் ஆண்டில் தோன்றிய அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னடைவு துரதிருஷ்டவசமாக சமூகத்தைப் போன்றே உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. பொருளாதாரப் பின்னடைவினைத் தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பாராட்டத்தக்க செயற்பாடுகள் காரணமாகவும் உலகளாவியரீதியில் ஏற்பட்ட தாக்கங்கள் காரணமாகவும் அத்தகைய அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ளுமளவுக்கான சுயபாதுகாப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் நிலவாமை காரணமாகவும் பொருளாதாரம் மிகவும் பலவீனமான மட்டத்திலேயே நிலவியது. இதனால் அரசாங்கத்தினால் நீண்டகால தந்திரோபாயமாக பொருளாதாரத்தின் நீண்டகால பின்னடைவும் கருத்திற்கொள்ளப்பட்டு அதன் காரணமாக கட்டுமானத்துறையிலும் தோன்றிய தாக்கத்தைக் குறைத்துக்கொண்டு பொருளாதாரத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்டு கொள்கைகள் வகுக்கப்பட்டன. ஒருசில கடுமையான நிதிசார் மட்டுப்பாடுகள் மற்றும் மூலப்பொருட்களிலான வழுங்கல் தட்டுப்பாடு போன்றே ஆண்டுக்குள் கட்டுமானத்துறையில் உள்ளீடுகளின் கிரயம் அதிகரித்தமையின் தாக்கத்தினால் 2023 ஆம் ஆண்டில் கூட்டாட்சி ஆதன கட்டுமானக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் மந்தகதியுற்றது. குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களின் கூட்டாட்சி வீடமைப்பு அவசியப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குவதே அரச கொள்கையாக அமைந்திருந்தது. அதன்மூலமாக கூட்டாட்சி ஆதன அபிவிருத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டதோடு மேற்படி ஊக்குவிப்பினை கூட்டாட்சி ஆதனத் துறையிலும் கொள்கைரீதியாக பதியம் செய்விப்பதற்காக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை செயலாற்றியது. அதற்கிணங்க தொடர்மாடி வீடுகளின் குடியிருப்பாளர்களின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகளின் நிருவாகம், பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாக வீட்டுக்குடியிருப்பாளர்களினதும் துறையைச் சேர்ந்த தொழில்வாண்மையாளர்களினதும் கொள்கை வகுப்போரதும் மேம்பாட்டின் நிமித்தம் 2023 ஆம் ஆண்டில் கொள்கை மற்றும் நிருவாகத் தீர்மானங்கள் பலவற்றை மேற்கொள்ள இயலுமாயிற்று என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

மேற்படி கொள்கை மற்றும் நிருவாகத் தீர்மானங்களை 2023 செயற்பாட்டுத் திட்டத்தில் வெற்றியீட்டச் செய்விக்க மேற்கொண்ட முயற்சிக்கு ஆக்கமுறையான சாதகமான பிரதிபலிப்பு கிடைத்தமையும் நாம் பெற்ற தனித்துவமான வெற்றியாகும். கட்டுமானத்துறை 2022 ஆம் ஆண்டில் 33.2மூ ஆல் வீழ்ச்சியடைந்தபோதிலும் வீடுகளுக்கான புதிய கேள்வி உருவாகியமை அவதானிக்கப்பட்டது. அதற்கான காரணம் கூட்டாட்சி ஆதனங்களை கொள்வனவு செய்தலில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். சிறந்த முகாமைத்துவம் காரணமாக அபாயநேர்வு நிலைமையின்கீழும் முகாமைத்துவ தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை பொருளாதாரரீதியாக உயர்வான இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதனால் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு சிரமங்களின் மத்தியில்கூட தாபனம்சார் இலக்குகளை வெற்றிகொள்ள முடிந்தமையால் அதன் நன்மைகளை அனைத்து ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்க இயலுமாயிற்று. இது கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை வரலாற்றில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பிரமாண்டமான நன்மையாகும். திறைசேரி நிதியேற்டுபாடுகளின்மீது தங்கியிராத அரச பொறுப்புமுயற்சியொன்றை சிறப்பாக முகாமை செய்தமையின் ஊடாக இலக்குகள், சவால்கள் மற்றும் நோக்கங்களை வெற்றிகொள்ள இயலுமென்ற சாதகமான செய்தியைப்போன்றே முன்மாதிரியையும் ஏனைய அரச பொறுப்புமுயற்சிகளுக்கும் வழங்க இயலுமாயிற்று. அது ஊழியர் செயலூக்குவிப்புக்கு சிறந்த உறுதுணையாகும்.

2021 ஆம் ஆண்டில் அரச பிரிவின் கூட்டாட்சி ஆதனங்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை 83மூ ஆல் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டிலும் குறைக்கப்பட்ட கட்டணங்கள் அவ்வண்ணமே அமுலாக்கப்பட்ட நிலைமையில் அதனை அதிகாரசபையின் வருமானத்தில் தாக்கமேற்படுத்தாதவகையில் முறைப்படி முகாமை செய்துகொண்டோம். மேலும் அரசாங்கத்தின் வீடமைப்பு வேலைத்திட்டத்தை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக முனைப்பான பங்களிப்பினை வழங்குகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுடன் சிறந்த புரிந்துணர்வுடனும் சுமுகமாகவும் இடைத்தொடர்புகளைக் கொண்டதாகவும் செயலாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை நாங்கள் இனங்கண்டுள்ளோம். அதனூடாக அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயப்பரப்பினை மிகவும் பயனுறுதிமிக்கதாகவும் நெகிழ்ச்சித்தன்மையுடனும் ஈடேற்றுவதற்குள்ள இயலுமையை வளர்த்துக்கொள்ளவும் எதிர்பார்க்கிறோம்.

அதைப்போலவே நடப்புத் தேவைகளையும் நடைமுறைச் சிக்கல்களையும் தீர்த்துக்கொண்டு கூட்டாட்சித்துறையின் புதிய போக்குகளையும் ஒழுங்குறுத்தல்களையும் அறிமுகஞ்செய்து பயனுறுதிமிக்கவகையில் கூட்டாட்சி சட்டத்தை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும் தன்னடக்கமான மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதனூடாக கூட்டாட்சி வீட்டுக் குடியிருப்பாளர்களின், ஆதன அபிவிருத்தியாளர்களின் மற்றும் தொழில்வாண்மையாளர்களின் கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக நிலவிய நடப்புச் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள பெரிதும் உறுதுணையாக அமையும். சவால்நிறைந்த நிலைமையிலும்கூட கூட்டாட்சித்துறையின் முன்னோடி என்றவகையில் நாங்கள் எமது நோக்கங்களையும் நிதிசார் சவால்களையும் வெற்றிகொண்டுள்ளோம். எம்மிடமுள்ள ஊழியர் குழாத்தின் ஊக்கமும் நம்பிக்கையுமே அதற்கான காரணமாகும். நிதிசார் இலக்குகளையும் நோக்கங்களையும் வென்றெடுத்து சவால்நிறைந்த ஒரு வருடத்திலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கையையும் உள்ளிட்டதாக 2023 இற்கான ஆண்டறிக்கையை மகிழ்ச்சிமிகுந்த உணர்வுடனேயே சமர்ப்பிக்கிறேன்.

## நன்றி

அதிகாரசபையின் 2023 ஆண்டின் செயலாற்றுகைக்காக பங்களிப்புச்செய்த அனைவருக்கும், நன்றிகூறவேண்டியது எனது பொறுப்பாகும். அதிமேதகு சனாதிபதி ரனில் விக்கிரமசிங்க அவர்களும் பிரதமர் தினேஷ் குணவர்தனவை உள்ளிட்ட அமைச்சரவைக்கும் ஒட்டுமொத்த அரசாங்கத்திற்கும் நான் எனது விசேட நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதிகாரசபையின் பயணப்பாதையை நிலைபெறுதகுவகையில் அமைத்துக்கொள்வதற்காக அறிவுறுத்தல்களை வழங்கி எம்மை ஊக்குவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு கௌரவ அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களான தேனுக விதானகமகே மற்றும் அருந்திக்க பர்னாந்து ஆகிய அமைச்சர்களுக்கும் விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலரென்றவகையில் சவால்நிறைந்த சந்தர்ப்பத்தில் பக்கபலமாக அமைந்த கௌரவ அமைச்சு செயலாளர் திரு. டபிள்யு. எஸ். சத்யானந்தவை உள்ளிட்ட அமைச்சு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே இலாபமீட்டுகின்ற நிறுவனமொன்றையும் ஆக்கமுறையான செயலாற்றுகையையும் அடைந்துகொள்ள வழிகாட்டிய அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அங்கத்தவர்களுக்கும் அத்துடன் இணையான அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச மற்றும் நியதிச்சட்டமுறையான சபைகளின் தலைவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதிகாரசபையை பலம்பொருந்தியதாக பேணிவர எனக்கு பாரிய பக்கபலமாக விளங்கிய பதில் பொதுமுகாமையாளர் பொறியியலாளர் திரு. ரசிக்க சில்வாவை உள்ளிட்ட ஒட்டுமொத்த பணியாட்டெகுதிக்கும் எனது மனமார்ந்த நன்றியை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்தரணி சரண கருணாரத்ன
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

> கூட்டாட்சி எண்ணக்கருவினை மக்கள்மயப்படுத்துதல் ஊடாக இது சம்பந்தமாக நிலவுகின்ற சட்ட முறைமை மற்றும் பிரமாணங்கள் சம்பந்தமாக ஆதன அபிவிருத்தியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வீட்டுக்குடியிருப்பாளர்களை செவிப்புல மற்றும் கட்புல ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வூட்டுவதோடு அது கூட்டாட்சி எண்ணக்கருவின் மேம்பாட்டுக்கான அறிவின் முதலீடாகும்..



# Review of the General Manager

2023 சவால்நிறைந்த ஒரு வருடமாக அமைந்தபோதிலும் சிறப்பான ஊழியர் அர்ப்பணிப்பு காரணமாக 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை மட்டற்ற மகிழ்ச்சியுடன் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை உன்னதமான வருமானத்தை ஈட்டியதோடு திட்டமிட்ட வகையில் பௌதீக இலக்குகளையும் அடைய இயலுமானமையுமே அதற்கான காரணமாகும். அடிக்கடி மாறிவருகின்ற கூட்டாட்சித் துறையின் புதிய போக்குகளையும் கவனத்திற்கொண்டு அதன் முன்னேற்றத்திற்கான சட்டத் திருத்தங்கள் ஊடாக புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த பிரமாண்டமான பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியில் பாரிய சவால்களை எதிர்கொண்ட ஆண்டாகும். ஆயினும் அபாயநேர்வு முகாமைத்துவ மூலோபாயங்களை அமுலாக்க இயலுமானதாக அமைந்தமையால் அதிகாரசபையின் வருமான நிலைமையை மேம்படுத்த இயலுமாயிற்று.

கட்டுமானத்துறையில் ஏற்பட்ட பின்னடைவு நிலைமையின்பேரில் அதிகாரசபையின் வருமானப் பிறப்பாக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் தொழிற்பாடுகளை மேற்கொள்ள இயலுமானதாக அமைந்தமையால் அது அதிகாரசபைக்கு தனித்துவமான நிலைமையாக அமைந்தது. நிலவிய நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை என்றவகையில் எமது சேவைபெறுனர்களுக்கு மனநிறைவான சேவைப் பங்களிப்பினை வழங்க இயலுமானதாக அமைந்ததென்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். முகாமைத்துவ தொழிற்பாடுகளை அமுலாக்குவதற்கான முறையிலாக அறிமுகஞ் செய்யப்பட்ட துரித அழைப்பு இலக்கம் ஊடாகவும் கூட்டாட்சி ஆதனத்தில் வதிகின்ற இருப்பாட்சியார்களுக்கு திருப்தியடையத்தக்க தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க இயலுமாயிற்று.

2023 இன் இறுதிக் காலாண்டில் இந்த நிலைமை ஓரளவுக்கு தணிந்தமையால் அது அதிகாரசபையின் வருமான விருத்திக்கும் உறுதுணையாக அமைந்தது. 2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் தொழிற்பாட்டு வருமானம் 297.28 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அது 2023 இல் 322.74 மில்லியன் ரூபா பெறுமானத்தை வகித்தது. அதிகாரசபை ஊடாக கூட்டாட்சி சான்றிதழ்களை விநியோகத்தல், முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை பதிவுசெய்தல் மற்றும் மீண்டும் புதுப்பித்தல், கைவிடப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை மீண்டும் பரிசீலனை செய்வதற்காக பிரயோகித்த தொடர்கண்காணிப்பு செயற்பாங்குகள் போன்ற வருமானப் பிறப்பாக்க மூலோபாயங்களிலிருந்தே இவ்விதமாக வருமானம் ஈட்டப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் எம்மால் வருமான வரி செலுத்தியபின்னர் 77.43 மில்லியன் ரூபா இலாபத்தை பதிவுசெய்ய இயலுமாயிற்று. அதிகாரசபையின் வரலாற்றில் முதல்த்தடவையாக வருமான வரிக்கு மேலதிகமாக பொது திறைசேரிக்கு 200.00 மில்லியன் ரூபாவை அரசாங்கத்தின் இறுப்பனவாக செலுத்த இயலுமாயிற்று. அத்துடன் வருமான வரித் திணைக்களத்திற்கு 77.29 மில்லியன் ரூபா வரியாக செலுத்தப்பட்டது.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக தோன்றிய நெருக்கடி காரணமாக துறைசார்ந்த பொருளாதாரத்தில் பின்னடைவு நிலைமை தோன்றினாலும் அபாயநேர்வு முகாமைத்துவ மூலோபாயங்களை அமுலாக்கக்கூடியதாக அமைந்தமையால் செயலிழந்து காணப்பட்ட கூட்டாட்சி அபிவிருத்தித் துறைக்கு வழிகாட்டல்களை தயாரித்துக்கொள்ள அதிகாரசபைக்கு இயலுமானதோடு அதன் மூலமாக கூட்டாட்சி ஆதனங்களுக்கான 124 தடைநீக்க சான்றிதழ்களை வழங்க இயலுமாயிற்று. அதன் மூலமாக 171.69 மில்லியன் ரூபா வருமானத்தைப் பிறப்பிக்கவும் இயலுமாயிற்று.

கூட்டாட்சி எண்ணக்கருவினை மக்கள்மயப்படுத்துதல் ஊடாக இது சம்பந்தமாக நிலவுகின்ற சட்ட முறைமை மற்றும் பிரமாணங்கள் சம்பந்தமாக ஆதன அபிவிருத்தியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வீட்டுக்குடியிருப்பாளர்களை செவிப்புல மற்றும் கட்புல ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வூட்டுவதோடு அது கூட்டாட்சி எண்ணக்கருவின் மேம்பாட்டுக்கான அறிவின் முதலீடாகும்.

நடப்புத் தேவையை கருத்திற்கொண்டு 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை சட்டம் மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் புத்திஜீவிகளினதும் துறையில் தேர்ச்சிபெற்றவர்களினதும் கருத்துக்களை கவனத்திற்கொண்டு திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அனைத்து வெற்றிகளும் நிதிசார் இலக்குகளும் ஊழியர்களின் மிகுந்த அர்ப்பணிப்பு காரணமாகவே பெறப்பட்டமையால் அதற்கு நன்றி தெரிவிக்குமுகமாக ஆண்டிறுதியில் அவர்களுக்கு கணிசமான நன்மைகளை வழங்க இயலுமாயிற்று. அதனூடக எதிர்வரும் ஆண்டுக்காகவும் அத்தகைய அர்ப்பணிப்பு மற்றும் இலக்கினை வென்றெடுப்பதற்கான தூண்டுதலை அளிப்பது முகாமைத்துவத்தின் அபிலாசையாகும்.

நன்றி நவிலல்

கடினமான காலப்பகுதியாக அமைந்தபோதிலும் மேலே நான் குறிப்பிட்ட வெற்றியை அடைய ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது நன்மதிப்பினை தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்பாட்டுப் பணிகளை மேற்கொள்கையில் அறிவுறுத்தல்களையும் ஒத்துழைப்பினையும் வழங்கிய கௌரவ அமைச்சருக்கும், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள் இருவருக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும், அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், மேலதிக செயலாளர்களுக்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பணியாளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்மீது வைத்துள்ள நம்பிக்கை சம்பந்தமாக தலைவருக்கும் பணிப்பாளர்சபைக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் பெறுமதிமிக்க வழிகாட்டல்களை பெரிதும் மதிக்கிறேன். அதிகாரசபையின் நிறைவேற்று மற்றும் ஏனைய பணியார்களுக்கும் அவர்களின் சக்தி மற்றும் அர்ப்பணிப்புடன் இந்த சவால்நிறைந்த காலத்தை வெற்றிகொள்ள முடிந்தமை தொடர்பாக திருப்தியடைவதோடு அதற்கான நன்றியை அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக எமது அனைத்து தரப்பினர்களுக்கும் அவர்களின் தாராளமான ஒத்துழைப்பினை வழங்கியமைக்காக எனது இதயபூர்வமான பாராட்டுகளையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே.பி.ஆர்.எச் சில்வா
பதில் பொதுமுகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ
அதிகாரசபை

# கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் பணிப்பாளர் சபை



சட்டத்தரணி திரு. சரண கருணாரத்ன
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை



திரு. கே.பி.ஆர்.எச். சில்வா
பதில் பொதுமுகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை



திருமதி ஏ.என். அமரதுங்க
திறைசேரி பிரதிநிதி
மேலதிக பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்



திரு. எம்.எச்.வீ. ரத்னகுமார ஜானக்க
பணிப்பாளர் (வீடமைப்பு)
பணிப்பாளர் நாயகத்தின் சார்பாக
நகர அபிவிருத்தி அதிகாரசபை



பொறியிலாளர் திரு. சீ.சீ.எச்.எஸ் பர்னாந்து
மேலதிக பொதுமுகாமையாளர் (மேற்கு)
பொது முகாமையாளரின் சார்பாக
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை



திரு. தமித்த குமாரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு



பொறியியலாளர் திரு. கே. ஏ. ஜானக
பொதுமுகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை



பொறியிலாளர் திரு. அநுர மெண்டிஸ்
பணிப்பாளர் - பொறியியலாளர் (நகரத் திட்டமிடுதல்)
ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக
கொழும்பு மாநகர சபை



திருமதி ஷாலிகா எஸ். ரணவீர
நகராட்சி ஆணையாளர்
ஸ்ரீ ஜயவரத்தனபுர கோட்டே மாநகர சபை

# கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் பணிப்பாளர் சபை



திரு. எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும
நகராட்சி ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை



செல்வி எல்.பி. மனோஜா எஸ். பத்திரண
நகராட்சி ஆணையாளர்
மொறட்டுவ மாநகரசபை
2023.02.27 தொடக்கம



திரு. அருண ஸ்ரீ வரு'ஹென்னதிகே
முகாமைத்துவ சேவைகள் பிரதிநிதி



திருந் பீ. பிரேமலால்
கூட்டாட்சி அபிவிருத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதி
2023.02.20 தொடக்கம



பின்சிறி பர்னாந்து
கூட்டாட்சி அபிவிருத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதி
2023.09.06 தொடக்கம

# தாபனஞ்சார் முகாமைத்துவம்



திரு. கே.பி.ஆர்.எச் சில்வா
பதில் பொதுமுகாமையாளர



திரு. நளீன் கன்கந்த
பிரதிப் பொதுமுகாமையாளர் (ஒழுங்கு-
றுத்தல்)



செல்வி மாதவீ எஸ். பரணயாப்பா
உதவிப் பொதுமுகாமையாளர் (பதில்)
(நிருவாகம் / மனிதவளம்)



திரு. பி. அமில நிஷாந்த
உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)



திருமதி நயனா பெல்பிற்ற
உதவிப் பொதுமுகாமையாளர்
(ஒழுங்குறுத்தல்)



செல்வி. எஸ்.எச்.ஆர்.பி. ஹேவகே
உதவிப் பொதுமுகாமையாளர்
(தொழிற்பாடுகள் / பராமரிப்பு)



திரு. சஜீவ சந்தன த சில்வா
உதவிப் பொதுமுகாமையாளர்
(தொழிற்பாடுகள் / பராமரிப்பு)



திருமதி ஐ.பி.பி.யு. ஜயதுங்க
உதவிப் பொதுமுகாமையாளர்
(தொழிற்பாடுகள் / பராமரிப்பு)
2023.09.30 தொடக்கம்



செல்வி நிசங்சலா இலேபெரும
உதவிப் பொதுமுகாமையாளர் (சட்டம்)



. திருமதி இந்தீவரி கமகே
உள்ளக கணக்காய்வாளர்
2023.10.01 தொடக்கம்

## கனி‘ட - நிறைவேற்றுப்

திரு. ஜீ.ஏ.யூ.ரி. சம்பத் - முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர்
திருமதி. சமந்தா அம்பாகல - வாடிக்கையாளர் சேவைகள் உத்தியோகத்தர்
திரு. சஜித் ஸ்ரீநாத் விமுக்தி - வாடிக்கையாளர் சேவைகள் உத்தியோகத்தர்
தசமிலா சுபாஹீனி லியனகே - கணக்கு உத்தியோகத்தர் (பதில்)
திருமதி எஸ். கோசலா ரணவீர - சிரேட்ட பொறியியல் உதவியாளர்
திருமதி எஸ்.பி.வை.ட. சுதர்மிகா - சிரேட்ட பொறியியல் உதவியாளர்
து'ானி லொக்குகே - நிர்வாக உத்தியோகத்தர் (பதில்)

# நோக்கங்கள

அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளின் பராமரிப்புக்காக 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை சட்டத்தினால் பொது வசதிகள் சபை நிறுவப்பட்டது. அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளின் பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் பராமரிப்பதே அதன் நோக்கமாக அமைந்தது. தனியார் துறையும் இதற்கு இணையானதாக மாடி வீடுகளை நிர்மாணிப்பதை துரிதப்படுத்தியதுடன் நகர்சார் மற்றும் அண்டிய பிரதேசங்களில் வீடமைப்பு பற்றாக்குறைக்கான தீர்வாகவும் நகர்சார் வசதிகளை அனுபவிப்பதற்காக தூண்டுதலளித்தது. அத்துடன் மாடி வீடுகள் விடயப்பரப்பு இந்நாட்டில் விரிவான வகிபாகமொன்றை சித்தரித்ததோடு துறையின் மேம்பாட்டுக்காக பொது வசதிகள் சபையினால் ஈடேற்றப்பட்ட சேவையைப் பார்க்கிலும் விரிவான சேவையினதும் மாடிவீடுகளின் ஒழுங்குறுத்தலுக்குமான அவசியம் தோன்றியது. அதற்கான தீர்வாக 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை திருத்தச் சட்டம் மூலமாக பொதுவசதிகள் சபை கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபையாக நிறுவப்பட்டது. அதன் மூலமாக அரசாங்க மற்றும் தனியார்துறை கூட்டாட்சி ஆதனங்களின் பராமரிப்பு, நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குறுத்தலுக்காக விரிவான தத்துவங்கள் உரித்தானதோடு கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகார சபையை நிறுவுவதற்கான நோக்கங்கள் பின்வருமாறு அமையும்.



(அ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதன சிறுகூறுகளையும் பொது அம்சங்களையும் பொது வாழ் வசதிகளையும் கட்டுப்படுத்தி, முகாமைசெய்து, பேணி, அத்துடன் நிருவகித்தல் :

(ஆ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களும் பொது வாழ் வசதிகளும் நல்லநிலையில் முறையாகப் பேணப்படுவதனையும், அத்தகைய ஆதனத்தை நல்ல நிலையிலும் சேவையாற்றத்தகு ஒழுங்கிலும் பேணுவதற்காகப் பருவத்துக்குப் பருவம் பழுதுபார்ப்பு வேலைகள் கொண்டுநடாத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதலும், அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதறற்கு முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரிதலும் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம் அல்லது சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்குத் தவறும்பட்சத்தில் அத்தகைய செயற்பாடுகளுடன் நேரடியாக ஈடுபட்டிருத்தலும்:

(இ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளை உள்ளடக்கும் எல்லாக் கட்டிடங்களும் தீவிபத்து, உள்நாட்டுக் குழப்பம் அல்லது கலகங்கள் என்பவற்றுக்கெதிராகக் காப்புறுதி செய்துகொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது சொந்தக்காரர்களால் அவ்வாறு வேண்டிக்கொள்ளப்பட்டால் காப்புறுதிசெய்தல் அல்லது காப்புறுதி செய்துவைத்திருத்தல் அத்துடன் விடயத்துக்கேற்றாற்போல முகாமைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது சொந்தக்காரர்களிடமிருந்து அத்தகைய கட்டுப்பணத்தை அல்லது கட்டணங்களை அறவிடுதல்:

(ஈ) கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்துக்கு முரணாக அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் அந்தந்தச் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது கொண்டுநடாத்தப்பட்ட அத்தகைய அதிகாரமளிக்கப்படாத நிர்மாணிப்புகள் எல்லாவற்றையும் அகற்றுதல்:

(உ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனங்கள் முறையாகப் பணியாற்றுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துதலும் அத்தகைய முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை முகாமைசெய்தலும் நிருவகித்தலும்:

(ஊ) அத்தகைய கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு நீர், சாக்கடை, வடிகால், வாயு, மின்சாரம், குப்பைகூளம் அகற்றுதல், குளிரூட்டல், தொலைபேசி, வானொலி மற்றும் மீளப்பரப்பு சேவைகள் போன்ற சேவைகளை ஏற்பாடுசெய்வதில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரிதல்:

(எ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் போன்ற வசதிகளைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு உதவிபுரிதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனங்கள் அத்தகைய வசதிகளைத் தாபித்துப் பேணத் தவறும்பட்சத்தில், அத்தகைய செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுதல்:

(ஏ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் என்பனவற்றின் பராமரிப்பை உள்ளூர் அதிகாரசபைக்கு கைமாற்றுதல்:

(ஐ) முகாமைக் கூட்டுத்தானத்தின் அல்லது அதன் சொந்தக்காரர்களின் அல்லது இருப்பாட்சியாளர்களின் வேண்டுகோளின்பேரில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்குப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புச் சேவைகளை வழங்குதல்:

(ஒ) பாதிப்புக்குள்ளாவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய நலன்களை பாதுகாப்பதற்கு அவசியமானவிடத்தெல்லாம் தலையிட்டுத் தடுப்பதற்கும் பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன நிர்மாணத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்:

(ஓ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கென மூலதன முதலீட்டுத் திட்டங்கள் உட்பட கூட்டாட்சி ஆதன மீள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும்:

(ஔ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தகைய கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைப் பொறுப்பேற்குமாறு அல்லது கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிறைவேற்றலைப் பொறுப்பேற்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையை அல்லது ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தை அல்லது எவரேனும் தனியார்துறை வீடமைப்பு அபிவிருத்தியாளரை வேண்டிக்கொள்ளுதல்:

(க) எவரேனும் சொந்தக்காரர் அத்தகைய கருத்திட்டத்தைப் பூரணப்படுத்தத் தவறும்பட்சத்தில், பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஏதேனும் கூட்டாட்சியாதனக் கருத்திட்டத்தை கட்டிமுடிக்கப் பொறுப்பேற்றல்:

(ங) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் கொண்டுநடாத்துவதற்காகக் காணியை அபிவிருத்திசெய்தல் அல்லது மீள் அபிவிருத்திசெய்தல் : அத்துடன்

(ச) மேற்படி குறிக்கோள்களுள் எதனையும் அல்லது எல்லாவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் செய்தல்.

# தத்துவங்கள

அரச மற்றும் தனியார் பிரிவின் கூட்டாட்சி ஆதனங்களின் அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் கூட்டாட்சி ஆதன இருப்பாட்சியாளர்களுக்காக பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் சம்பந்தமாக உயர்வான, நம்பிக்கைமிக்க மற்றும் வசதியான மாடிவீட்டு வாழ்க்கை முறையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் (திருத்தம்) சட்டம் மூலமாக பரவலான அதிகாரம் கைளிக்கப்பட்டது. இதன்கீழ் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு அவசியமான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவசியமான மதியுரைசார்ந்த மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவல்களுக்கான தலையீடுசெய்வதற்கான இயலுமை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. அத்துடன் மாடி வீட்டு இருப்பாட்சியாளர்களின் சாதகமான வாழ்க்கைப்போக்கிற்கும் கட்டிடக் கட்டமைப்புக்கு சேதமேற்படுத்தக்கூடிய மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுதல், மனிதவாழ்க்கைக்கு பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான பழிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை இனங்கண்டு அவற்றுக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும் அதன் மூலமாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2003 இன் 24 ஆம் இலக்க சட்டம் மூலமாக கூட்டாட்சி முகாமத்துவ அதிகாரசபைக்கு சட்டத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பின்வருமாறு.



(அ) ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், உரித்தாக்குதல், மானியம் அல்லது கொள்வனவு மூலம் கொள்ளுதல் அல்லது கொடைவகையாக அல்லது வேறுவிதமாகக் பெறுதல், அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல், முகாமைசெய்தல், விற்றல், ஒப்படைத்தல், கொடுத்துமாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல்:

(ஆ) உள்ளூரிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் மரணசாதனக் கையளிப்புகளையும் பெறுதல்:

(இ) பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்படும் பணங்களைக் கடனாகப் பெறல்:

(ஈ) அதிகாரசபையினால் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணிச் சிறுகூறுக்காக அல்லது கட்டிடங்களுக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்துக்காக வாடகை விதித்தல்:

(உ) இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்கள் அல்லது இறுப்பனவுகள் விதித்தல் :

(ஊ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறைகளுக்கு விகிதாசாரமாக அவர்களிடமிருந்து எவையேனும் கட்டுப்பணங்கள் அறவிடுதல்:

(எ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது வசதிகளுக்கு அல்லது பொது அம்சங்களுக்குச் சொந்தக்காரர் உட்பட எவரேனும் ஆளினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைச் சீர்செய்வதில் உறப்பட்ட செலவுகளை அவரிடமிருந்து அறவிடுதல்:

(ஏ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு உட்பட எவையேனும் சேவைகளை அதற்கு வழங்குதலும் அதற்கான இறுப்பனவுகளை விதித்தலும்:

(ஐ) கட்டிட நிர்மாண வேலையைப் பொறுப்பேற்றல்:

(ஒ) ஏனைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது அம்சங்களுக்கும் வசதிகள் அளிப்பனவாய குழாய்கள், கம்பிகள், வடங்கள், கம்பிவடக் குழாய்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும், பழுதுபார்க்கும் அல்லது புதுப்பிக்கும் நோக்கத்தக்காக அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறை அல்லது பொதுவசதிகளை அல்லது பொது அம்சங்களைப் பராமரிக்கும், புதுப்பிக்கும், மறுசீரமைக்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றும் அல்லது இடித்தழிக்கும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் இயைபான நியதிச்சட்ட தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்தக்காக அல்லது இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிப்பதில் நியாயமான எல்லா வேளைகளிலும் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குள், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல்:

(ஓ) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு மீளாய்வுசெய்யும் நோக்கத்தக்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் காணிச் சிறுகூறுக்குள் நியாயமான எல்லா வேளைகளிலும் ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல்:

(ஔ) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக நியாயமானளவு தேவைப்படுத்தப்படும்வாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் மற்றும் அத்தகைய உடன்பாட்டொழுங்குகளைச் செய்தல்:

(க) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள்வனவாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் ஈடுபெற்றவருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் உத்தேச கொள்வனவாளருக்கும் அல்லது ஈடுவைத்தவருக்கும் ஈடுபெற்றவருக்கும் இடையேயான பிணக்குகளைத் தீர்த்தல்:

(ங) அதிகாரசபையின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்:

(ச) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கான விதிகளை ஆக்குதல்: அத்துடன்

(ஞ) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்.

# நிதிசார் முன்னேற்றம

வசதியான தொடர்மாடி வீடமைப்புக் கலாசாரமொன்றிற்கான கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம் மற்றும் நிருவாக வகிபாகம் ஊடாக சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்தோம். அரச வருமானத்திற்கு நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்பினை வழங்குவதற்காக ஆதன அபிவிருத்தி, ஒழுங்குறுத்தல் ஊடாக கூட்டாட்சித்துறையில் முன்னிலையான அரும்பணியை ஈடேற்றி வருகின்றது.

2023 ஆம் ஆண்டில் அதிகாரசபை தொழிற்பாடுகளிலிருந்து 332.74 மில்லியன் ரூபா வருமானத்தைப் பிறப்பித்தது. 2022 ஆண்டில் அதிகாரசபையின் தொழிற்பாட்டு வருமானமாக அமைந்த 297.28 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 9மு ஆல் வருமான அதிகரிப்பினை வெளிக்காட்டுகின்றது. 2022 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தச் செலவு 166.22 மில். ரூபாவாக அமைந்ததோடு 2023 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தச் செலவு 168.23 மில். ரூபாவாக அமைந்தது. அதன்படி 2022 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2023 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தச் செலவினம் 1மு ஆல் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் வருமான வரி ஒதுக்கப்பட்ட பின்னர் தேறிய மிகைநிலை 77.43 மில். ரூபாவாக அமைவதோடு 2022 ஆம் ஆண்டில் தேறிய மிகைநிலை 47.85 மில். ரூபாவாக அமைந்தது. அது 2022 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 62மு அதிகரிப்பாகும்.

வரிக்கு முந்திய இலாபம்

**Million 154.52**

அரசாங்கத்திற்கு செலுத்திய வரி

**Million 77.29**

வரிக்குப் பிந்திய இலாபம்

**Million 77.43**

## 2022 நிதியாண்டுடன் சார்புரீதியாக

| வருமானம் | செலவுகள் | தேறிய இலாபம் |
|---|---|---|
| ▲ 9 % | ▲ 1% | ▲ 62% |

கூட்டாட்சித் துறையின் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் கடினமான காலப்பகுதியிலும்கூட ஊழியர்களின், பாவனையாளர்களின், சமூகப் பொறுப்பினை குறைவின்றி ஈடேற்றி தனது செயற்பொறுப்பினை சிறப்பாக ஆற்றியுள்ளது.

இந்த காலகட்டத்தில் மாடிவீடுகளிலும் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாகவும் துறையில் தோன்றிய சிக்கல்களுக்காக வாடிக்கையாளர் சேவைகள் பிரிவும் பொறியியலாளர் பிரிவும் இடையீடுசெய்து துரிதமாக தீர்வுகளை வழங்கவும் இயலுமாயிற்று.











## ஊழியர்கள்

ஊழியர் நலனோம்பலையும் தொழில்சார் செயலூக்குவிப்பினையும் நோக்கமாகக்கொண்டு கடந்த புதுவருட காலத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பண்டங்களின் பொதியொன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.

மேலும் தாபன ஊழியர்களின் பிள்ளைகளுக்கு அவசியமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளை கொள்வனவு செய்வதற்காக இலக்கிய மாதத்தை அடிப்படையாகக்கொண்டு விசேட வட்டியில்லா நிதிசார் கடன்தொகை வழங்கப்பட்டது.

கடந்த நிதியாண்டில் நிறுவனம் அடைந்திருந்த நிதிசார் இலக்கினையும் முன்னேற்றத்யைும் கவனத்திற்கொண்டு ஆண்டிறுதியில் மிகையூதியத்தை ஊழியர்களுக்கு வழங்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர்களின் சுகாதார நிலைமையை சாதகமானதாக பேணிவருவதற்கான சுகாதாரக் காப்புறுதித் திட்டம் 2023 ஆம் ஆண்டிலும் அமுலாக்கப்பட்டது.

## வாடிக்கையாளர

கூட்டாட்சி ஆதனங்களின் மாடிவீட்டுவாசிகளுக்கு, முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு, ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு பணியாட்டொகுதியினருடன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியான உறவுகளைப் பேணிவருவது சிரமமானதாக அமைந்தது.

எனினும் தரப்பினர்களுக்கு இயலுமான உச்ச விதத்தில் அலுவலக சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டியைக் கடைப்பிடித்து உயரிய சேவை வழங்கப்பட்டது. அக்காலப்பகுதிக்குள் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவுக்கும் சட்டப் பிரிவுக்கும் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகள், சிக்கல்களைத் தீர்த்துவைத்தல், கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு மதியுரை சேவைகளை வழங்குதலை தனது முதன்மைப் பொறுப்பாகக் கருதி ஈடேற்றப்பட்டது. இதற்காக துரித தொலைபேசி அழைப்பு இலக்கம் 011 □ 2444575 பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

அத்துடன் நிலவிய நிலைமையின் பேரில் நிர்மாணத்துறை ஒருவிதத்திலான பின்னடைவினை சந்தித்தபோதிலும் ஆதன அபிவிருத்தியாளர்கள் தைரியமிழக்காதவகையில் சேவைகள் வழங்கப்பட்டன.

மேலும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக மாடி வீடுகளுக்காக சமுதாயப் பங்கேற்புடனும் அதிகாரசபையின் இடையீட்டுடனும் அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களுக்காக பங்களிப்பு நல்கியது.

## சமூகரீதியான

வலுவான முகாமைத்துவக் கூட்டுத்தாபனமொன்று வசதியான மாடிவீட்டு வாழ்க்கை என்ற தொனிப்பொருளின்கீழ் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் தோன்றுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு அவசியமான இடையீடுகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொண்டு மிகவும் சுமுகமான மக்கள் சேவையொன்றை வழங்க இயலுமானதோடு அதற்கு மேலதிகமாக கூட்டாட்சி ஆதனத்துறையில் ஈடுபடுகின்ற தொழில்வாண்மையாளர்கள் கூட்டாட்சியாதன சட்டம் சம்பந்தமாக அச்சு ஊடகம் மூலமாக விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

கூட்டாட்சியாதன நிர்மாணிப்பின் போதும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கையிலும் சிக்கல்களை குறைத்துக்கொள்ளுதல் இதன் நோக்கமாகும்.

அதன் மூலமாக துறைக்கான அவர்களின் பங்களிப்பினை மிகவும் பரவலாக பெற்றுக்கொள்ள இயலுமானதாக அமையும். மேலும் மாடி வீடுகளில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் சீராக பேணிவரப்படுமாயின் அது அந்த மாடிவீட்டுவாசிகளின் பரஸ்பர சுமுகநிலைமைக்கு பாரிய உறுதுணையாக அமையும்.

மேற்சொன்ன காரணங்களால் வீடமைப்புத் திட்டங்களின் நலன்புரிச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், மரண உதவிச் சங்கங்கள் என்பவற்றை தாபித்துக் கொள்ளவும் வசதியானதாக அமைகின்றது. அதன் மூலமாக சமூகரீதியாக சாதகமான ஒற்றுமை நிலவுகின்ற சமூகமொன்று உருவாவதன் ஊடாக மாடிவீட்டு வாழ்க்கையில் சுகமான சூழலொன்று உருவாக்கப்படும்.

## அரசாங்கம்

கடந்த நிதியாண்டுக்காக அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியை முறைப்படி உண்ணாட்டு அரசிறைத் திணைக்களத்திற்கு செலுத்த இயலுமானமை மூலமாக சுருங்கிய உள்நாட்டுப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக வரித் தொகைக்கு மேலதிகமாக பொது திறைசேரிக்கு 200.00 மில்லியன் ரூபா இறுப்பனவினைச் செலுத்தியதன் மூலமாக பங்களிப்புச்செய்ய அதிகாரசபைக்கு இயலுமாயிற்று.

அத்துடன் அரசாங்கத்தின் தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை பராமரித்தல், நிருவாகம் மற்றும் முகாமைசெய்தலுக்கான முகாமைத்துவக் கூட்டுத்தாபனக் கட்டமைப்பு அறிமுகஞ் செய்யப்பட்டதோடு ஒவ்வொரு மாடி வீடமைப்புத் திட்டத்திலும் மேற்படி முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் இயங்கிவருகின்றன.

இதனால் மாடிவீடுகளின் பராமரிப்புக்காக இதற்கு முன்னர் பொது திறைசேரி ஊடாக கணிசமான பணத்தொகை நிதியேற்பாடுகளாக ஒதுக்கப்பட்டது. இன்றளவில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் ஊடாக பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அரசாங்க நிதிஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. எனவே இது சுழற்சிமுறையில் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான நிலைமையை உருவாக்கி இருக்கின்றது. இதனால் மாடிவீடுகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை நாட்டின் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்காக ஈடுபடுத்த அரசாங்கத்திற்கு இயலுமாயிற்று.

# அலுவலகக் கட்டமைப்பு




**பொறியியல் பிரிவு**

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கூட்டாட்சியாதனங்களின் ஒழுங்குறுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், கூட்டாட்சியாதன சான்றிதழ்களை வழங்குதல், கூட்டாட்சியாதனங்களில் அமைக்கப்பட்டுள்ள அத்துமீறிய கட்டுமானங்களை அகற்றுதல், முறைப்பாடுகளுடன் தொடர்புடைய நிலையம்சார் பரீட்சித்தல்களை நடாத்துதல் என்பவை மேற்கொள்ளப்படுகின்றன.

**வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு**

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் முகாமைசெய்தல் மற்றும் சிறிய கூறுகளின் உரிமையாளர்களின் சிக்கல்களுக்கு அவசியமேற்படுமிடத்து ஆலோசனைகளை வழங்குதல்.

**சான்றிதழ்கள் பிரிவு**

கூட்டாட்சியாதன நிர்மாணிப்புகள் தொடர்பிலான பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் பரீட்சித்துப் பார்த்து இவை ஒழுங்குமுறைப்படி உள்ளனவென்பதை சான்றுறுதிப்படுத்தி கூட்டாட்சியாதன சான்றிதழ்களை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**மனித வள முகாமைப் பிரிவு/ நிருவாகப் பிரிவு**

அதிகாரசபையின் பணியாட்டொகுதியை நிருவகிப்பதற்காக அவசியமான அனைத்துப் பணிகளும் நிருவாகப் பிரிவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

**சட்டப் பிரிவு**

கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக இடையீடுசெய்து வருவதோடு, நடப்புத் தேவைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படவேண்டிய சட்டத் திருத்தங்களையும் பிரமாணங்களையும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுதல் இப்பிரிவு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது.

**நிதிப் பிரிவு**

அதிகாரசபையின் நிதி நிருவாகம், திட்டங்களை வகுத்தல், இலக்குகளை மீளாய்வுசெய்து முகாமைத்துவத்திற்கு தகவல்களையும் அறிக்கைகளையும் வழங்குதல் நிதிப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய கருமங்கள் இப்பிரிவு மூலமாக ஈடேற்றப்பட்டு வருவதோடு கூட்டாட்சி ஆதனத் துறையின் புதிய போக்குகளை இனங்காணல், விழிப்புணர்வூட்டலுடன் தொடர்புடைய வெளியீடுகளை தயாரித்தல் போன்றவற்றையும் ஈடேற்றி வருகின்றது.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

அதிகாரசபையின் அனைத்துப் பிரிவுகளினதும் கணக்காய்வுப் பணிகளை ஈடேற்றி வருகின்றது.

**தொழிற்பாடுகள்/ பராமரிப்புப் பிரிவு**

அலுவலக பராமரிப்புப் பணிகள், திருத்த வேலைகள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களின் அத்துமீறிய கட்டுமானங்களை அகற்றுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# கூட்டாட்சி கருத்திட்டங்களுக்கான அங்கீகாரமும் சான்றிதழ் வழங்குதலும்

அரச மற்றும் தனியார் பிரிவுகளால் நிர்மாணிக்கப்படுகின்ற மாடி வீடுகளில் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்குமுகமாக மேற்படி ஆதனங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தி சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் ஒவ்வொரு படிமுறைக்கும் சட்டரீதியாக ஒவ்வொரு கூறினதும் சொத்துவத்தைக் கையளிக்கின்ற ஆவணமொன்று ஆதன அபிவிருத்தியாளர் ∴கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பவர்கள் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர் கொள்வனவாளருக்கு வழங்குவதற்கான இயலுமை நிலவுகின்றது. அதாவது வீடமைப்புத் தொகுதியொன்றில் ஒன்றுடனொன்று பிணைந்த வீடுகள் அமைந்துள்ளதோடு அந்த வீடுகளுக்காக தனித்தனியாக செயலாற்றுதலும் சொத்தாண்மையைக் காட்டுவதற்காக ஒவ்வொரு மாடியிலும் அமைந்துள்ள வீடுகளுக்காக அதன் எல்லைகளைக் குறிப்பிட்டு திட்டவரைபடங்கள் தயாரிக்கப்படுவதோடு அந்த வரைபடம் கூட்டாட்சி வரைபடம் என அழைக்கப்படுகின்றது. அதற்கிணங்க கூட்டாட்சி வரைபடம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் நற்சாட்சிப்படுத்திக் கொடுத்தபின்னர் வெளிப்படுத்தல் உறுதியை காணிகள் பதிவகத்தில் பதிவுசெய்யலாம். அதைப்போலவே தற்காலிக பகுதிகள் தவிர்ந்ததாக கூட்டாட்சிக் கட்டிடத்தில் எஞ்சிய கூறுகளுக்காக உறுதிகளை வழங்குவதற்கான இயலுமையும் நிலவுகின்றது.

அரச பிரிவினாலும் தனியார் பிரிவினாலும் நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகளும் பொது அம்சங்களும் முறைப்படியும் போதுமான வகையிலும் நிலவுகின்றதா என்பதை பரீட்சித்துப் பார்த்து கூட்டாட்சி சான்றிதழ் 2003 இன் 24 ஆம் இலக்கமுடைய பொதுவசதிகள் திருத்தச் சட்டம் மூலமாக தாபிக்கப்பட்ட ஒழுங்குறுத்தல் அதிகாரசபையான கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் வழங்கப்படுகின்றது. மேலும் இந்த கூட்டாட்சி சான்றிதழை வழங்குகையில் 1973 இன் 11 இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றப்படுவதோடு அதன்போது வீடமைப்புக் கூறுகளின் உரிமையாளர்களுக்கு அந்த ஆதனங்களின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் பற்றிய உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சான்றிதழ் வருமானம் அதிகாரசபையின் பிரதான வருமான வழிவகையாகும். 2005 ஆம் ஆண்டிலிருந்து 2023.12.31 வரை அதிகாரசபையினால் 1,479 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 58 சான்றிதழ்கள் இலக்காகக் கொள்ளப்பட்டதோடு ஆண்டிறுதியளவில் முன்னேற்றம் 60 ஆக அமைந்தது.

2019 - 2023 வரையான காலப்பகுதிக்குள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கூட்டாட்சி சான்றிதழ்களின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள

| | | வருடாந்த இலக்கு | முன்னேற்றம | சதவீதம் |
|---|---|---|---|---|
| 2019 | நிதிசார் (ரூ.) | 369.73 | 154.25 | 42% |
| | பௌதீக | 102 | 176 | 173% |
| 2020 | நிதிசார் (ரூ.) | 171.58 | 168.16 | 98% |
| | பௌதீக | 217 | 62 | 28% |
| 2021 | நிதிசார் (ரூ.) | 248.0 | 335.03 | 135% |
| | பௌதீக | 100 | 44 | 44% |
| 2022 | நிதிசார் (ரூ.) | 207.27 | 146.84 | 71% |
| | பௌதீக | 34 | 74 | 217% |
| 2023 | நிதிசார் (ரூ.) | 246.01 | 171.69 | 70% |
| | பௌதீக | 128 | 124 | 97% |



கூட்டாட்சி சான்றிழ் விநியோகத்தின் பௌதீக இலக்குகளும் முன்னேற்றமும்




2019 - 2023 வரை விநியோகித்த கூட்டாட்சி சான்றிதழ்களின் நிதிசார் இலக்கு




**2005 - 2023** விநியோகித்த சான்றிதழ்கள் **1 4 7 9**

2023 ஆம் ஆண்டில் கூட்டாட்சி சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பங்கள் மத்தியில் சரிபார்த்தல் பட்டியலுக்கிணங்க (ஊறநஉம டளைவ) ஆவணங்களை வழங்காமை மற்றும் வேறு குறைபாடுகள் காரணமாக அவ்வாண்டில் சான்றிதழ் வழங்கப்படாத கூட்டாட்சி ஆதனங்களின் எண்ணிக்கை18 ஆகும்.

2014 ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பதற்காக முன்வந்தமை காரணமாக கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் சம்பந்தமான புதிய போக்கு உருவாகியிருந்தபோதிலும் நிலவிய சூழ்நிலையின் பேரில் துறையானது ஒருவிதமான பின்னடைவிற்கு இலக்காகி உள்ளது.

மேலும் தனியார் துறையினால் நிறைவுசெய்யப்பட்ட ஒருசில கட்டிடங்களுக்காக இசைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாமையால் இந்த அதிகாரசபையின் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க இயலாதுள்ளது.

இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக அதிகாரசபையானது கூட்டாட்சித்துறையின் முன்னோடி என்றவகையில் 2018 இன் 23 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சிறப்பேற்பாடுகள் சட்டத்தை அறிமுகஞ் செய்தமையால் 1999.12.31 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுனாமி மீள்குடியமர்த்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் கட்டியெழுப்பப்பட்டுள்ள கூட்டாட்சி ஆதனங்களுக்காக தளர்வான ஒரு முறையியலைக் கடைப்பிடித்து கூட்டாட்சி ஆதனங்களை பதிவுசெய்யவும் உரிமையை கையுதிர்க்கவும் இயலுமை கிடைத்துள்ளது.

# 2023 ஆம் ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கூட்டாட்சி சான்றிதழ்கள்

## PPC - 64

பூர்வாங்க தடைநீக்கச் சான்றிதழ

### பூர்வாங்க தடைநீக்கச் சான்றிதழ

கூட்டாட்சி ஆதன சட்டத்துடன் தொடர்புடைய பொதுவசதிகளும் பொது அம்சங்களும் கட்டிடத் திட்டத்தில் அடங்கியுள்ளதா என்பதை பரிசோதித்து மேற்படி ஆதனங்களை நிர்மாணிக்கையில் நிர்மாணிப்புகள் நிறைவடையும்வரை கடைப்பிடிக்கவேண்டிய விடயங்கள் பற்றிய வழிகாட்டியென்றவகையில் பூர்வாங்க தடைநீக்க கடிதம் விநியோகிக்கப்படுகின்றது.

அதற்கிணங்க 2023 ஆம் ஆண்டில் நிர்மாணிக்க முன்மொழியப்பட்டிருந்த 64 கூட்டாட்சி ஆதனங்களுக்கான பூர்வாங்க தடைநீக்கத்துடன் தொடர்புடைய தடைநீக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தடைநீக்க அறிவுறுத்தல்கள் ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு நிர்மாணிப்பு பணிகளில் வழிகாட்டுதலை மேற்கொண்டு வருகின்றது.

## கூட்டாட்சி சான்றிதழ்கள

2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த கூட்டாட்சி சான்றிதழ்களின் எண்ணிக்கை - 60

முழுமையான/ தற்காலிக /பகுதியளவிலான கூட்டாட்சி சான்றிதழ்களின் எண்ணிக்கை

### முழுமையான கூட்டாட்சி சான்றிதழ்கள






முழுமையான கூட்டாட்சி சான்றிதழை கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணித்து முடித்தபின்னர் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனைப் பெற்றுக்கொள்வதாயின் அந்த கட்டிடம் அத்துமீறிய நிர்மாணிப்புகளின்றி கட்டிடத் திட்டத்திற்கு அமைவாக கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்துமே சரியாக சமர்ப்பிக்கப்பட்டபின்னர் அதிகாரசபையினால் அறவிடப்படுகின்ற முன்னாயத்த கட்டணத்தைச் செலுத்திய பின்னர் மேற்சொன்ன கோப்பிற்கான சேவை வழங்கல் ஆரம்பிக்கப்படும். துறையில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது கூட்டாட்சி வரைபடத்தில் ஏதேனும் வழு இல்லாவிட்டால் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின்னர் வெளிப்படுத்தல் உறுதியொன்றை சட்டத்தரணியொருவர் மூலமாகத் தயாரித்துக்கொண்ட பின்னர் காணிகள் பதிவகத்தில் பதிவுசெய்தலை மேற்கொள்ளவேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு கொள்வனவாளருக்கும் உறுதியை வழங்குவதற்கான இயலுமை உண்டு.

### தற்காலிக கூட்டாட்சி சான்றிதழ்

கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிக்கின்றவர்களுக்காக நிர்மாணிப்பினை ஆரம்பிக்கின்ற ஆரம்பத் தருணத்திலேயே இந்த தற்காலிக கூட்டாட்சி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும். இது ஆதன அபிவிருத்தி கம்பெனிக்கு வங்கிக்கடனைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மேற்சொன்ன ஆதனத்தில் வீடுகளை விற்பனை செய்வதற்காகவும் சம்பந்தப்பட்ட கொள்வனவாளர்களுக்காக கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளவும் உதவுவதாக அமையும்.




இந்த சான்றிதழை விநியோகிக்கையில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை ஊடாக தற்காலிக கூட்டாட்சி வரைபடமொன்று அங்கீகரிக்கப்படுவதோடு அது பொதுமுகாமையாளரின் கையொப்பத்துடன் வழங்கப்படுகின்ற பிரதான சட்டபூர்வமான ஆவணமாகும்.



கூட்டாட்சி ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களுக்காக தயாரிக்கப்படுகின்ற விற்பனை உறுதி அந்த தற்காலிக கூட்டாட்சி வரைபடத்திற்கமைவாக தயாரித்துக்கொள்ள முடியும். அதைப்போலவே அதனோடு சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியை காணிகள் பதிவகத்தில் பதிவுசெய்யவும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### பகுதியளவிலான கூட்டாட்சி சான்றிதழ





பகுதியளவிலான கூட்டாட்சி சான்றிதழ் என்பது உத்தேச கூட்டாட்சி ஆதனத்தின் ஒரு பகுதியை நிறைவுசெய்து எஞ்சியதை பின்னர் அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்குகின்ற தருணத்தில் மேற்படி நிறைவுசெய்த பகுதிக்காக இசைவுச் சான்றிதழொன்று பெறப்பட்டுள்ளவேளையில் வழங்கப்படுகின்ற சான்றிதழாகும். இது கிடையான வீடமைப்புத் திட்டமாகவோ அல்லது குத்தான (வுழறநச) வீடமைப்புத் திட்டமாகவோ உள்ளிட்டு 02 அல்லது 03 வீடுகள் என்ற சிறிய சந்தர்ப்பத்திற்காக ஈடுபடுத்த முடியும். அதற்காக இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தில் பதிவுசெய்துள்ள கட்டிட சேவைகள் பொறியியலாளரொருவரின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சான்றிதழை வழங்கும்போது முக்கியமானதாக அமைவது அமைத்து முடித்துள்ள பகுதிகளுக்காக உறுதியினை வழங்குவதற்கான இயலுமை நிலவுவதாகும்.



# முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை நிறுவுதல், கட்டமைப்பு, பொறுப்புகள் மற்றும் தத்துவங்கள்

## முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை நிறுவுதல்

கூட்டாட்சி ஆதனமொன்றின் பொது அம்சங்களை பராமரித்தல் கூறுகளின் உரிமையாளர்களால் நிறுவப்படுகின்ற சங்கங்கள் அல்லது சபைகள் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டுமென 1973 இன் 11 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 16 வது பிரிவு மூலமாக அறிமுகஞ்செய்யப்பட்டுள்ளது. அதில் இவ்விதமாக குறிப்பிடப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனமொன்றின் உரிமையாளர்கள் அனைவராலும் அந்த ஆதனத்திற்குரிய பொது அம்சங்களை கட்டுப்படுத்துகின்ற, முகாமைத்துவம் செய்கின்ற, பராமரிக்கின்ற அல்லது நிருவகிக்கின்ற பணிக்காக அவர்களின் சங்கங்களை அல்லது சபைகளை நிறுவிக்கொள்வது சட்டமுறையானதாக அமையவேண்டும். இது சட்டபூர்வமான கட்டமைப்பொன்றினை அறிமுகஞ்செய்தலாக அமையவில்லை.

இதனூடாக கூட்டாட்சி ஆதனமொன்றின் பொது அம்சங்களை பராமரித்துப் பேணிவருதிலான நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியவேளைகளில் அதற்கான தீர்வுகளை வழங்க 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானவையாக அமையாததால் அதற்கான தீர்வாக மிகவும் விரிவான தத்துவங்களைக் கொண்ட பொறியமைப்பொன்றின் அவசியம் தோன்றியது.

அதற்கான தீர்வாக 1982 இன் 45 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டத்தின் 20 வது பிரிவு மூலமாக கூட்டாட்சி ஆதனமொன்றின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகளின் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பினை முறைசார்ந்தவகையில் பேணி வருவதற்காக "முகாமைத்துவக் கூட்டுத்தாபனம" எனும் சட்டக் கட்டமைப்பு அறிமுகஞ் செய்யப்பட்டது. இவ்விதமாக அறிமுகஞ்செய்யப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் உள்ளடக்கம், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் செயற்பொறுப்பு போன்றவை இந்த சட்டத்தின் 20 வது பிரிவில் மிகவும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க கூட்டாட்சித் திட்டவரைபடம் பதிவுசெய்யப்பட்டவிடத்து இந்த சட்டத்தின் பிரகாரம் சிறுகூறுகளின் உரிமையாளர்கள் இடையறாத வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட சபையொன்றாக அமைவதோடு அது "முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்" என அழைக்கப்படும்.

முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்பேரில் அதனாலும் அதற்கெதிராகவும் வழக்குத் தொடரப்பட இயலும். மேலும் கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயம் சம்பந்தமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினாலும் அதற்கெதிராகவும் வழக்குத் தொடரப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து சிறு கூறுகளின் உரிமையாளர்களும் கூட்டாக எந்த ஆதனம் சம்பந்தமாக கடப்பாடு கொண்டுள்ளார்களோ அந்த கூட்டாட்சி ஆதனத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயம் சம்பந்தமாக முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வழக்குத் தொடருவதற்கான அதிகாரம் சிறுகூறுகளின் உரிமையாளர்களுக்கும் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. 2003 இன் 39 ஆம் இலக்க திருத்தச் சட்டம் மூலமாக இந்த தத்துவங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

உதா:- பொது அம்சங்களின் பராமரிப்புக்காக பணம் செலுத்தாமை காரணமாக பொது வசதிகளை துண்டிப்பதற்கான அதிகாரத்தை வழங்குதல்.

## முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் கட்டமைப்பு மற்றும் பதவிதாங்குனர்களை நியமித்தல

கூட்டாட்சி ஆதனமொன்றுடன் சம்பந்தப்பட்ட சிறுகூறுகளின் உரிமையாளர்கள் மகாசபைக் கூட்டத்தில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்படுகின்ற ஒருசில மட்டுப்பாடுகளுக்கு அல்லது கட்டளைகளுக்கு அமைவாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பினும், முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்காக அதன் பணிகளை பேணிவரவேண்டிய வேண்டியிருப்பினும், அந்த பணிக்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பணிகளை அமுலாக்கக்கூடியதாக இருப்பினும் உத்தியோகபூர்வ குழுமமொன்று சிறுகூறுகளின் உரிமையாளர்களால் தெரிவுசெய்யப்படல் வேண்டும். இது பற்றி இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 20 ஆ (4) பிரிவின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க இடம்பெறல் வேண்டும். அதற்கிணங்க சம்பந்தப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பெயராக அமையவேண்டியது "XXXXXXXXX இலக்கமுடைய கூட்டாட்சித் திட்டவரைபடத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்' என்பதாகும்.

இவ்விதமாக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவப்படுகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் சபை ஒவ்வொரு மகாசபைக் கூட்டத்தின்போதும் தெரிவுசெய்யப்பட வேண்டியபோதிலும், அடுத்த மகாசபைக் கூட்டத்தின்போது பதவி நிறுத்தப்படவேண்டியபோதிலும், உரிமையாளர்கள் மூவருக்குக் குறையாததுதம் நால்வருக்கு மேற்படாததாகவும் அமையவேண்டுமெனவும், உரிமையாளர்கள் மூவருக்கு குறைவான சந்தர்ப்பத்தில் அனைவருமாக அமையவேண்டுமெனவும் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பதவிக்காலம் 15 மாதங்களுக்கு மேற்படலாகாது.

## முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு

அனைத்து உரிமையாளர்களுக்கும் நன்மையை விளைவிக்கின்றவகையில் பொது அம்சங்களை முகாமைசெய்து முறைப்படி பேணிவருதலும் அவற்றை சேவைபெறக்கூடிய வகையில் சிறந்த தரத்தில் வைத்துக்கொள்வதுமே முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அடிப்படைப் பணியாக அமைகின்றது

1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தம்) சட்டத்தின் இரண்டாவது

அட்டவணையின் பிரிவுகளில் காட்டப்படுகின்றவாறு உரிமையாளராலும் முகாமைத்துவக் ்டுத்தாபனத்தினாலும் கடைப்பிடிக்கபடவேண்டிய ௨ருமங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

பொது அம்சங்களை முகாமைசெய்து முறைப்படி பேணிவருதலும் அவற்றை சேவைபெறக்கூடிய வகையில் சிறந்த தரத்தில் வைத்துக்கொள்வதுமே அதன் அடிப்படைப் பணியாகும்.

- கூட்டாட்சி ஆதனத்தில் இருக்கின்றதும் ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளுக்கான பொது அம்சங்களை இருப்பாட்சிசெய்தல் சம்பந்தமாக பாவிக்கக்கூடியதாகவும், மின்னுயர்த்திகளை உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் சாதகமான நிலையில் இருக்கக்கூடியதுமாக, சேவையை வழங்கக்கூடிய வகையில் பழுதுபார்த்து சாதகமாக தரமுடையதாக பராமரித்தல் வேண்டும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் பொது அம்சங்கள் மீது புற்றரைகளையும் பூங்காக்களையும் அமைத்து பராமரித்தல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பொது அம்சங்களை இருப்பாட்சி செய்தல் சம்பந்தமாக பாவிக்கக்கூடிய மலக்குழாய்களையும் கம்பிகளையும் பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் புதுப்பித்தலையும் மேற்கொள்ள வேண்டும்.
- உரிமையாளரொருவரின் அல்லது அவரது கூறில் பதிவுசெய்யப்பட்ட அடகுபெறுனரின் எழுத்திலான வேண்டுகோளின்பேரில் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் அந்த உரிமையாளருக்கு அல்லது அடகுபெறுனருக்கு அல்லது உரிமையாளர் அல்லது அடகுபெறுனரால் ஆவணமொன்றினால் தத்துவமளிக்கப்படுகின்ற ஒருவருக்கு கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட அனைத்துக் காப்புறுதிப் பத்திரங்கள் மற்றும் அந்த பத்திரங்களுக்காக செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்களுக்கான இறுதிப் பற்றுச்சீட்டு வழங்கப்படல் வேண்டும்.
- கட்டிடங்கள் தீ மற்றும் வேறு ஆபத்துகள் சம்பந்தமாக நிலவுகின்ற பெறுமானத்திற்கேற்றவாறு காப்புறுதி செய்துகொள்ள வேண்டும்.
- கட்டிடமொன்றுக்கு விளைந்த நட்டம் சம்பந்தமாக கிடைத்த காப்புறுதித் தொகையை அந்த கட்டிடத்தை மீள நிர்மாணித்தல் மற்றும் இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்காக உடனடியாக ஈடுபடுத்தவேண்டும்.
- பொதுஅம்சங்களுக்கு விளைவிக்கின்ற ஏதேனும் தொல்லைகளை நிறுத்துமாறு பணிப்புரைவிடுத்து அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்கள் அல்லது கட்டிடமொன்று சம்பந்தமாக செய்யவேண்டிய திருத்தவேலைகள், முன்னேற்றகரமாக்கல்களை விதித்து அரசாங்கத்தின் அல்லது பொது அல்லது நீதிமன்றத்தினால் விடுக்கப்படுகின்ற அறிவித்தலுக்கிணங்க செயலாற்றவேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தை மீறி கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலாள கூட்டாட்சி ஆதனத்தில் தாக்கமேற்படுத்துகின்ற ஏதேனும் அத்துமீறிய நிர்மாணிப்பினை அகற்றிக்கொள்ளமாறு பணித்து அரசாங்கத்தினால் அல்லது எவரேனும் அதிகாரியால் செய்யப்படுகின்ற அறிவித்தலுக்கு அல்லது பணிப்புரைக்கு அமைவாக செயலாற்றுதல் அல்லது அத்தகைய அகற்றுதலுக்காக ஒத்துழைக்குமாறு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையிடம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திடம் அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் வேண்டுகோள் விடுப்பதும் அதற்குரிய பணியாகும்.
- கட்டிடத்தின் கூட்டாட்சிப் பகுதிகள் அயைத்திற்கும் நீர், மின்சாரம் மற்றும் வேறு பயன்பாடுகளை வழங்குவதற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அல்லது இலங்கை மின்சார சபையினால் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால் அல்லது வேறு சபையினால் அல்லது உரிமம்பெறுனரால் வழங்கப்பட்ட நீர், மின்சாரம் மற்றும் வேறு பயன்பாடுகளுக்கான பிரத்தியேக தொடர்புகளை துண்டித்தல் வழியாக அல்லது சிறுகூறின் உரிமையாளரால் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்புடைய கட்டணத்தைச் செலுத்தும்வரை சம்பந்தப்பட்ட இடங்களுக்கு வழங்கப்படுகின்ற வழங்கலை தொடர்ச்சியாக துண்டித்துவைக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாக முறைப்படி வளங்களை முகாமைசெய்யப்படுதலும் ிடம்பெறல் வேண்டும்.
- மேற்படி அனைத்துக் கருமங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட கூட்டாட்சி பகுதிகளின் உரிமையாளர்களின் பாகங்களின் பங்கிற்கு படிப்படியாக கூட்டாட்சி பாகங்கள் அனைத்தினதும் உரிமையாளர்களிடமிருந்து மாதாந்த பங்களிப்புத் தொகையை அறவிடுதல் மூலமாக முகாமைத்துவத்திற்கான நிதியங்கள் சேகரிக்கப்படல் வேண்டும்.

## முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் தத்துவங்கள

கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் கூறிற்காக அரசாங்கத்தின் ஏதேனும் அதிகாரசபையினால் பணிக்கப்படுகின்ற பொது அம்சங்கள் மற்றும் திருத்தவேலைகள் பற்றிய அறிவித்தலுக்கிணங்க செயலாற்றுகையில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை இருப்பின் அதனை உரிமையாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கான சட்டபூர்வமான உரிமை முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

சிறுகூறுகளின் உரிமையாளர்களால் பொது அம்சங்களை இருப்பாட்சிசெய்தல் சம்பந்தமாக அவர்களின் பாவனைக்காக அமையும் ஆதனங்களைக் கொள்வனவுசெய்தல், வாடகைக்கு எடுத்தல் அல்லது வேறுவிதமாக கையகப்படுத்தவும் அதற்கு அதிகாரம் உண்டு.

1973 இன் 11 ஆம் இலக்கமுடைய (திருத்தப்பட்ட) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தம் ) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துணைவிதிகளை வலுவுக்கு கொண்டுவருவதற்காக அவசியமான சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரம் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

ஏதேனும் கூறு அல்லது பொது அம்சத்தை இருப்பாட்சிசெய்தலுடன் தொடர்புடையதாக பாவிக்கப்பட்டு வருகின்ற மலக் குழாய்கள், நீர்க்குழாய்கள், கம்பிகள், வடங்கள் மற்றும் சனசமூக நிலையங்களை பராமரிப்பதற்கான அதிகாரம் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் அனைத்து உரிமையாளர்களுக்கும் நன்மை கிடைக்கத்தக்கவகையில் பொதுஅம்சங்களை நிருவகிக்கவும் முகாமைசெய்யவும் வேண்டும். மேலும் கூட்டுத்தாபனத்தினால் எவரேனும் திட்டவட்டமான உரிமையாளருடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டு பொது அம்சங்களின் ஒரு பகுதியை பாவித்தல் அல்லது இருப்பாட்சி செய்வதற்கான தனி உரிமை அல்லது பொது அம்சங்கள் அல்லது அதன் ஒரு பகுதி தொடர்பில் விசேட சிறப்புரிமைகளை அந்த உரிமையாளருக்கு வழங்கலாம்.

ஏதேனும் சிறுகூறிற்காக வழங்கப்பட்ட மேலே காட்டப்பட்ட பணிப்புரை அல்லது அறிவித்தலுக்கிணங்க நியாமான காலப்பகுதிக்குள் செயலாற்றுவதை சிறுகூறின் உரிமையாளர் தவறவிட்டால் அந்த அறிவித்தலுக்கு அல்லது பணிப்புரைக்கு அமைவாக செயலாற்றி அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகையை உரிமையாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கான சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவும் அதற்கு அதிகாரம் உண்டு.

அத்தகைய பல்வேறு தத்துவங்கள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு மேற்படி சட்டம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

## சிறுகூறுகளின் உரிமையாளர்களின் பொறுப்புகள்

1. கட்டிடத்தின் பொதுப்பெயருக்கு பங்கமேற்படக்கூடிய எந்தவிதமான சட்டவிரோத பணிக்காகவும் தனது சிறுகூறினை பாவித்தலாகாது.
2. புகை அல்லது துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்ற எந்தவொரு பொருளையும் எதையேனும் எரிபொருளாக பாவித்தலாகாது.
3. உரிமையாளர்களால் வைத்துக்கொள்ளப்பட்ட குப்பைகள் கொள்கலன்களில் அல்லது கட்டிடத்திற்காக வழங்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளைத் தவிர்ந்த பொது அம்சங்கள் அல்லது அவற்றின் ஏதேனுமொரு பகுதிமீது வீறியெறியவோ அல்லது விழுவதற்கோ இடமளித்தலாகாது.
4. வேறு உரிமையாளர் எவருக்கேனும் தொந்தரவாக அமையக்கூடிய ஏதேனும் விலங்கினை தனது சிறுகூறில் அல்லது பொது அம்சங்களில் வைத்திருத்தலாகாது.
5. சிறுகூறுகளின் உரிமையார்களுக்கு அல்லது அந்த உரிமையாளரின் குடும்பத்தவர்களுக்கு தொல்லையை அல்லது அபாயகரமான நிலைமை ஏற்படுகின்ற ஏதேனும் விதத்தில் ஏதேனும் கருமத்திற்காக தனது கூறினை பாவித்தல் அல்லது பாவிக்க இடமளித்தல் ஆகாது.
6. கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களின் நிருவாகம் அல்லது பொது அம்சங்களை நிருவகிக்க அல்லது முகாமைத்துவம் செய்வதற்காக அந்த அலுவல்களை சிறப்பாக பேணிவருவதற்காகவும் சிறுகூறுகளின் உரிமையாளர்களால் முழுமையான முனைப்பான ஒத்துழைப்பினை முகாமைத்துவ அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்.
7. கீழே குறிப்பிட்ட கருமங்களுக்காக அவருடைய சிறுகூறிற்குள் அனைத்து நியாயமான நேரங்களிலும் அறிவித்தல் வழங்கவேண்டியது அவசியமற்றதாகக்கூடிய அவசர சந்தர்ப்பத்திலும் தவிர நியாயமான அறிவித்தலை வழங்கிய பின்னர் சிறுகூறிற்குள் பிரவேசிக்க கூட்டுத்தாபனத்திற்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் அனுமதி வழங்குதல் வேண்டும்.
   - சிறுகூறினை பரிசோதிப்பதற்காக
   - வேறு ஏதேனும் சிறுகூறு அல்லது பொது அம்சங்களை இருப்பாட்சிசெய்தல் சம்பந்தமாக பாவிக்கப்படுகின்ற அல்லது பாவிக்கக்கூடிய சாக்கடைக் குழாய்கள், நீர்க் குழாய்கள், கம்பிகள், வடங்கள் மற்றும் குழாய்களை பராமரிக்க அல்லது பழுதுபார்க்க அல்லது புதுப்பிப்பதற்காக
   - பொது அம்சங்களை பராமரித்தல், திருத்தியமைத்தல் அல்லது புதுப்பித்தல்
   - கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஈடேற்றுதல் அல்லது சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்ட துணைவிதிகள் அல்லது கட்டிடத்திற்கு தாக்கமேற்படுத்துகின்ற வேறு துணைவிதிகளை அமுலாக்குவதற்காக அது தொடர்பாக நியாயமானதாக அமையத்தக்க ஏதேனும் வேலையை அமுலாக்குதல்.
8. கட்டிடத்தின் பொது நன்மைக்கான வேலைகளைத் தவிர்ந்த தமது சிறுகூறு சம்பந்தமாக செய்யவேண்டுமென ஏதேனும் அரசாங்கத்தின் பகிரங்க அல்லது நியதிச்சட்டமுறையான அதிகாரசபையினால் பணிக்கப்படுகின்ற அனைத்து வேலைகளும் சிறுகூறுகளின் உரிமையாளர்களால் தாமதமின்றி மேற்கொள்ளப்படவேண்டுமென அவரது கூறிற்காக செலுத்தவேண்டிய அனைத்து ஆதனவரிகளும் செலவுகளும் செலுத்தப்படல் வேண்டும்.
9. தனது சிறுகூறில் திருத்தியமைத்து பராமரிக்கப்பட வேண்டுமென்பதைப்போன்றே நியாயமான உக்கிப்போதல் மற்றும் கரைதல் மற்றும் தீயினால் புயலினால் மற்றும் சண்டமாருதத்தினாலும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படுகின்ற சேதங்கள் தவிர்ந்ததாக சாதகமான புதுப்பித்தல் நிலைமையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.
10. ஏனைய உரிமையாளர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தவர்கள் அல்லது அவர்களின் விருந்தினர்களால் பொது அம்சங்கள் பாவிக்கப்படுதல் மற்றும் இருப்பாட்சிசெய்தல் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாதவகையிலும் அவர்களின் நியாயமான பாவனைக்கு இடையூறு ஏற்படாதவகையிலும் பொது அம்சங்கள் பாவிக்கப்படல் மற்றும் இருப்பாட்சி செய்யப்படல் வேண்டும்.
11. திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் அப்போதைக்கு பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தனது சிறுகூறினை பாவித்தல் பற்றிய விதிமுறைகளுக்கு முரணான ஏதேனும் கருமத்திற்காக தனது கூறினை பாவித்தலாகாது.
12. தனது கூறின் உரிமையிலான மாற்றம் அல்லது தனது கூறு சம்பந்தமான தான் அறிந்த வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு தாமதமின்றி அறிவிக்க வேண்டும்.

## வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் கூட்டாட்சி ஆதன முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு



# முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு வலுவளித்தல

ஆதனமொன்றின் சொத்துவத்தை வகிக்கின்ற ஆளொருவருக்கு அந்த ஆதனத்தின் உரிமையாளர் ∴உரிமையாளர்களால் பராமரித்தல் இடம்பெற்றபோதிலும் கூட்டாக இருப்பாட்சி செய்கின்ற கூட்டாட்சியாதன பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் பராமரித்தலை குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரால் செய்ய இயலாதென்பதால் கூட்டாக இருப்பாட்சி செய்கின்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்கின்ற சட்டமுறையான கட்டமைப்பாக அமைவது முகாமைத்துவக் கூட்டுத்தாபனமாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அதிகாரசபை 978 கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவியுள்ளது.

கூட்டாட்சியாதன முகாமைத்துவ அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் சட்டப்பிரிவு கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்ற மக்களின் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக இயலுமான உச்ச பங்களிப்பினை காட்டியது.

அதற்கிணங்க அரச மற்றும் தனியார் பிரிவின் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களிடமிருந்து கிடைத்த 2,113 முறைப்பாடுகளில் 1,971 இற்கு தீர்வுகளை வழங்க 2023 ஆம் ஆண்டில் இயலுமாயிற்று.

| 2019 தொடக்கம் 2023 வரை நிறுவப்பட்ட அத்தகைய முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் சம்பந்தமான முன்னேற்றம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களையும் குழுக்களையும் பதிவுசெய்தல் /பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தல் | | | | | | | |
| வருடம் | பதிவுசெய்தல் | | பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தல் | | நிதிசார் (ரூ. ஆயிரம்) | | வருமான சதவீதம் |
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | சதவீதம் |
| 2019 | 45 | 59 | 235 | 487 | 2,770 | 1,753 | 63% |
| 2020 | 80 | 60 | 750 | 390 | 2,700 | 2,072 | 77% |
| 2021 | 50 | 47 | 1044 | 462 | 2,700 | 2,369 | 88% |
| 2022 | 50 | 40 | 470 | 496 | 4,700 | 2,196 | 47% |

முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை பதிவுசெய்தல்.




பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை




முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களையும் குழுக்களையும் பதிவுசெய்ததன் மூலமாக




## முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுகையில் முகங்கொடுக்க நேரிடுகின்ற

- ஆதனத்தின் பொது அம்சங்களை பராமரிப்பதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் முக்கியத்துவம் பற்றி ஆதன உரிமையாளர்கள் கொண்டுள்ள விழிப்புணர்வில் குறைபாடுகள் நிலவுதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களின் குடியிருப்பாளர்கள் இன்னமும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுதல் சம்பந்தமாக ஆர்வம் காட்டாமை.
- தனியார் நிறுவனங்களால் நிர்மாணிக்கப்படுகின்ற பெரும்பாலான ஆதனங்களின் உரிமையாளர்கள் அவற்றில் நிரந்தரமாக குடியமர்ந்திராமை.
- வலிந்துதவுகின்ற சேவையாக பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அலுவல்களுடன் தொடர்புபடுவதில் காட்டுகின்ற அசமந்தப்போக்கு.
- அரச கூட்டாட்சி ஆதனங்களில் வதிபர்கள் பராமரிப்புப் பணத்தைச் செலுத்தத் தவறவிடுதலும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் பதவிதாங்குனர்களுக்கு ஏனைய குடியிருப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்காமையும்.
- அரசாங்கம் நிர்மாணித்த கூட்டாட்சி ஆதனங்களில் அத்துமீறிய கட்டுமானங்கள் அதிகரித்தமையால் பெரும்பான்மை குடியிருப்பாளர்கள் அது தொடர்பில் காட்டுகின்ற எதிர்ப்பு.
- அரச மற்றும் தனியார் ஆகிய இருபிரிவுகளிலும் அபிவிருத்தியாளர்கள் அல்லது ஆதனக் கொள்வனவாளர்களிடையே நிலவுகின்ற சிக்கல்கள் காரணமாக வீடமைப்புக் கூறுகளின் உரிமையாளர்களுக்கான உறுதிகள் கிடைக்காமல் போனதன்பேரில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க இயலாமை.
- பெரும்பாலான கூட்டாட்சி ஆதனங்களில் பல்வேறு காரணங்களினால் உறுதி வழங்கப்பட்டிராமை காரணமாக கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் முகாமைசெய்வதற்கான முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க இயலாதுள்ளமை.
- பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அலுவல்களில் இணைந்துகொள்வதில் காட்டுகின்ற தயக்கம்.

## 2005 – 2023 வரை இலங்கையில் வியாபித்துள்ள அரச மற்றும் தனியார் கூட்டாட்சி ஆதனக்

2005 - 2023 காலப்பகுதியில் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் குழுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை

| | தனியார் | அரச | கூட்டுத்தொகை |
|---|---|---|---|
| முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் | 649 | 375 | 1,024 |
| முகாமைத்துவக் குழுக்கள் | 80 | 94 | 175 |
| ஒருங்கிணைந்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் | 08 | 07 | 15 |




கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களன் விரிவாக்கம் மேற்படி தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

# சட்டப் பிரிவின் செயற்பொறுப்பு



திருத்தச் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட 2003 இன் 24 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்தின் 6 (க) பிரிவின் பிரகாரம் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட தற்காலிக கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சிப் பகுதிகளின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கும் அதன் உரிமையாளருக்கும் இடையில் அல்லது உரிமையாளருக்கும் கொள்வனவு செய்தவருக்கும் இடையில் அல்லது உரிமையாளருக்கும் அடகு பெற்றவருக்கும் இடையில் அல்லது அடகு பெற்றவருக்கும் கொள்வனவுசெய்யக் கருதியுள்ளவருக்கும் இடையில் அல்லது அடகு பெற்றவருக்கும் அடகு வைத்தவருக்கும் இடையில் தோன்றுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் அதிகாரம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது.

அதன்கீழ் அதே சட்டத்தின் 16 (1) பிரிவில் மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினர்களுக்கிடையில் கூட்டாட்சியாதன பகுதியொன்றை பாவிக்கையில் அல்லது கையேற்கையில் அல்லது அதனோடு இணைந்த பொது வசதிகள் அல்லது பொது அம்சங்களை இருப்பாட்சி செய்கையில் ஏதேனும் பிணக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் அந்த ஆள் அல்லது முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் அது பற்றி அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டுமெனவும் அதிகாரசபையினால் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதியானதும் நியாயமானதுமான பணிப்புரையொன்று விடுக்கப்படல் வேண்டுமெனவும் காட்டப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கும் கூட்டாட்சி ஆதனத்தின் வதிவாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் போன்றே பொறியியல் பிரிவினால் ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட சிக்கல் எழுத்து மூலமாக அல்லது பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில் சட்டப்பிரிவிடம் ஆற்றுப்படுத்தப்படுவதோடு சட்டப் பிரிவினால் மேற்படி சிக்கல் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை மூலமாக நியமிக்கப்படுகின்ற விசாரணை உத்தியோத்தருக்கு ஆற்றுப்படுத்தப்படும். விசாரணை உத்தியோகத்தரால் வழங்கப்படுகின்ற விதப்புரைகளின் பிரகாரம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் பணிப்புரை விடுக்கப்படுவதோடு அத்தகைய பணிப்புரையை மீறுகின்ற அல்லது கடைப்பிடிப்பதை தவறவிடுகின்ற ஆட்கள் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்தின் 25 வது பிரிவின் பிரகாரம் தவறுபுரிபவர் ஆவார். சட்டப் பிரிவினால் பணிப்புரையை ஏற்றுநடக்காத ஆட்களுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு பிறிதொரு தரப்பினரால் அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு தொடர்பிலும் சட்டப்பிரிவு தோற்றும்.

மேற்சொன்ன பணிகளுக்கு மேலதிகமாக நடப்புத் தேவைகளுக்கிணங்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்திற்கும் இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திற்கும் ஏற்புடைய திருத்தங்கள் இனங்காணப்பட்டு மேற்சொன்ன சட்டங்களை திருத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சட்டப்பிரிவுடன் தொடர்புடைய செயற்பொறுப்பாகும்.

அத்துடன் கூட்டாட்சி ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆளிடமிருந்து அல்லது கூட்டாட்சி ஆதனங்களின் உரிமையாளரிடமிருந்து ஏதேனும் பணத்தொகை அறவிடப்படவேண்டியுள்ள தருணத்தில் அப்பணத்தொகையை அறவிட்டுக்கொள்ள ஏற்புடைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம், பதிவாளர் தலைமை அதிபதி திணைக்களம், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம் போன்ற நிறுவனங்களுடன் இணைப்பாக்கம்செய்து கூட்டாட்சி ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கிப் புரிதல் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் கூட்டாட்சி ஆதன அபிவிருத்தியாளர்கள், முகாமைத்துவக் குழு உத்தியோகத்தர்கள், கூட்டாட்சி ஆதன வதிவாளர்கள் போன்றே கூட்டாட்சி ஆதனத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில்வாண்மையாளர்கள் போன்றவர்களுக்கு கூட்டாட்சி ஆதனச் சட்டம் பற்றி விழிப்புணர்வூட்டுதலும் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கூட்டாட்சி ஆதனங்கள் பற்றி நிலவுகின்ற சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அவசியமான ஒத்துழைப்பினை வழங்குதலும் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்ற மக்களின் சட்டச் சிக்கல்களை தீர்த்துவைத்து மிகவும் வசதியான வாழ்க்கையைக் கழிக்க அவசியமான வழிகாட்டல் சட்டப்பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

# சட்டப் பிரிவில் முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு




## கூட்டாட்சியாதன பாவனையின்போது தோன்றுகின்ற சிக்கல்கள்

விசாரணை சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் வடிவத்திற்கிணங்க கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்த இயலும்.

- கூட்டாட்சிக் கட்டிடத்தை நிர்மாணித்து விற்பனை உடன்படிக்கையொன்று மூலமாக விற்பனைசெய்து 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளபோதிலும் கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்யாமல் வதிவாளர்களுக்கு உறுதிகளை வழங்காமை.
- கூட்டாட்சி ஆதனங்களில் நிலவுகின்ற குறைபாடுகளை அபிவிருத்தியாளர் திருத்தியமைக்காமை.
- பொது அம்சங்களும் பொது வசதிகளும் அங்கீகரித்த கட்டிடத் திட்டத்திற்கு அமைவாக நிர்மாணிக்காமை.
- உரிமையாளர்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்த பராமரிப்புத் தொகையை செலுத்தாமை.
- அத்துமீறிய நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் , பொது நிலப்பரப்பு பாவனையின்போது தோன்றுகின்ற சிக்கல்கள்.
- கூட்டாட்சி ஆதனங்களில் செல்லப் பிராணிகளை வளர்த்தல்.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையில் 2011 ஆம் ஆண்டிலிருந்தே பிணக்குகளை தீர்த்துவைத்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு 2023 ஆம் ஆண்டில் இவ்விதமாக முன்கொண்டுவரப்பட்ட 87 பிணக்குகளில் ஏறக்குறைய 50 ஐ தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| வருடம் | முந்திய வருடத்திலிருந்து முன்கொண்டுவரப்பட்ட பிணக்குகள் | வருடத்திற்குள் கிடைத்த பிணக்குகள | வருடத்தில் தீர்த்துவைத்த பிணக்குகள | முன்கொண்டுசென்ற பிணக்குகள |
|---|---|---|---|---|
| 2021 | 71 | 26 | 20 | 76 |
| 2022 | 76 | 50 | 40 | 87 |
| 2023 | 87 | 30 | 50 | 67 |

## பொதுமக்களின் மனக்குறைகளுக்கு தலைசிறந்த பிரதிபலிப்பு செய்வதற்கான தாபனஞ்சார் பொறியமைப்பு

முறைப்பாடு கிடைத்த பின்னர் பிரதிவாதி தரப்பினருக்கு முறைப்பாட்டின் பிரதியொன்றை அனுப்பி அது சம்பந்தமான அவதானிப்புகளை 14 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளல்.

- அவதானிப்புகள் கிடைத்து 02 வாரங்களுக்குள் விசாரணைக்காக அழைப்புவிடுத்தல்.
- இணக்கம் பெறப்படின் முதலவது நாளிலேயே அதனை அறிவித்து விசாரணையை நிறைவுசெய்தல்.
- இணக்கம் காண இயலாவிடின் விசாரணைக்காக முன்வைத்தல் / அழைப்பித்தல்.
- வாய்மொழிமூல சான்றுகள் அல்லது எழுத்திலான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல்.
- அதற்கிணங்க,
- பணிப்புரைகளை விடுத்தல்.
- பணிப்புரையை கடைப்பிடிக்காவிடத்து நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்

2000 ஆம் ஆண்டில் நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் வெளியிடப்பட்டன. ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டுக் குழுவினை உள்ளிட்ட பல்வேறு அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் மூலமாக நடாத்தப்பட்ட நீண்டகால மற்றும் சிக்கலான பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் முன்வைக்கப்பட்டன. பிரதானமாக கருத்திற்கொண்டால் நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள் கட்டமைப்பானது வறுமையை ஒழித்தல், புவியை பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் சௌபாக்கியத்தை உருவாக்குவதற்கான செயற்பாட்டுத் திட்டமாகும்.

நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் கட்டமைப்பானது உலகின் நிலைபேறான, உறுதியான அபிவிருத்திப் பாதைக்கு வழிப்படுத்த பங்களிப்புச் செய்கின்ற தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பல முன்னெடுப்பகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக ஐக்கிய நாடுகள் தாபனத்தைச் சேர்ந்த அனைத்து அங்கத்துவ நாடுகளும் மேற்சொன்ன குறிக்கோள்களை ஈடேற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன.

17 நோக்கங்கள், தொடர்புடைய 169 இலக்குகள், 230 சுட்டிகள் ஊடாக நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் நாடொன்றின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தரநியமங்களின் விருத்திக்காக அமுலாக்குவதற்கான உபாய மார்க்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க இலங்கையும் மேற்சொன்ன குறிக்கோள்களை அடைவதற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம் மூலமாக ஏற்புடைய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் கூட்டாட்சித் துறையின் அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்ட பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் உபாய மார்க்கத் திட்டங்கள் ஊடாக மேற்சொன்ன குறிக்கோள்களை வலுவுடையதாக்க பங்களிப்பு நல்கியுள்ளது.

## நிலையான வளர்ச்சி உத்திகள்

ஆகிய விடயங்கள் சம்பந்தமாகவும் கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணிக்க முன்னர் அதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினரை வீழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**7** சூரிய வலுச்சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை பிறப்பித்தல். கழிவு நீர் , சாக்கடைத் தொகுதியை மீள்சுழற்சியாக்குதல் மழை நீர் மீள்சுழற்சியாக்க செயற்பாங்கு திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ முறைமையைத் தாபித்தல்

**11** இதன்கீழ் புதிய முகாமைத்துவக் கூட்டுத்தானங்களை நிறுவுதல், இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தலும் இயங்குகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை முறைப்படி பேணிவருவதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. “பலம்பொருந்திய முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் வசதியான மாடிவீட்டு வாழ்க்கைக்கான உறுதுணையாகும்" தொனிப்பொருளின் ஊடாக கூட்டாட்சி மாடி வீடுகளில் வசிப்பவர்களுக்கு உன்னதமான சேவை அதன்மூலமாக வழங்கப்படுகின்றது.

**15** கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணிக்கையிலும் திட்டமிடுகின்ற வேளையிலும் பழைய மரங்கள் பாதுகாக்கப்படத்தக்கவகையிலும் நிர்மாணிப்பின் பின்னர் பொது இடங்களில் புதிய மரநடுகையை மேற்கொள்ளல். அதன் மூலமாக வீடுகளில் வசிப்பவர்களுக்கு மிகவும் தூய்மையான வளிச்சுற்றோட்டத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைதல்.



## கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
## ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட உண்மையான மற்றும் நிகழ்கால ஊழியர்

| பதவி | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உண்மையான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள |
|---|---|---|---|
| பொதுமுகாமையாளர் - பணிப்பாளர்சபை செயலாளர | 01 | - | 01 |
| பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்) | 01 | 01 | - |
| பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) | 02 | 01 | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்) | 01 | 01 | - |
| உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள் பராமரிப்பு) | 04 | 02 | 02 |
| உதவிப் பொது முகாமையாளர் ( மனித வள நிர்வாகம்) | 01 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (கட்டிடக்கலை விஞ்ஞானி) | 01 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (வாடிக்கையாளர் சேவைகள்) | 01 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 | 01 | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 01 | 01 | - |
| வாடிக்கையாளர் சேவைகள் உத்தியோகத்தர் | 02 | 02 | - |
| சிரேட்ட பொறியியல் உதவியாளர | 05 | 02 | 03 |
| முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| செயலாளர | 02 | - | 02 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 | - | 01 |
| கணக்கு உத்தியோகத்தர | 01 | - | 01 |
| உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 | - | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுடபம் (பொறியியல் உதவியாளர் / திட்டமிடல் வினைஞர்) | 14 | 08 | 06 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (புத்தகம் பதியுனர்) | 01 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத | 39 | 32 | 07 |
| வீட்டுப் பராமரிப்பாளர் | 04 | 04 | - |
| ஆரம்பநிலை வினைஞர் - (சாரதிகள்) | 14 | 10 | 04 |
| தச்சுத்தொழில் புரிபவர் | 02 | 02 | - |
| மேசன் | 02 | - | 02 |
| பம்பி இயக்குனர் ∴ பொறுப்பாளர | 08 | 04 | 04 |
| நீர்க் குழாய் காய்ச்சியிணைப்பவர | 01 | 01 | - |
| ஆரம்பநிலை - பகுதியளவிலான வினைஞர் (மின்சாரத் தொழில்நுட்பவியலாளர்) | 02 | 02 | - |
| புத்தகம் கட்டுனர் | 01 | - | 01 |
| ஆரம்பநிலை வினைஞர் அல்லாத - (பயிற்றப்படாத தொழிலாளி) / (அலுவலக உதவியாளர்) | 21 | 16 | 05 |
| கூட்டுத்தொகை | **137** | **92** | **45** |

## பதவியணி மறுசீரமைப்பு

2023 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 137 ஆக அமைந்தபோதிலும் 2023 திசெம்பர் மாதமளவில் பணியாளர் எண்ணிக்கை 92 ஆக விளங்கியது. ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க நிலவுகின்ற வெற்றிடங்களை 2024 ஆம் ஆண்டில் நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதிகார சபையின் பணியாளர்களைப் பயிற்றுவித்தல

2023 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க திட்டமிடப்பட்டிருந்த அதிகாரசபையின் பணியாட்டொகுதி பயற்சிக்காக 16 பேரை பங்கேற்கச் செய்விக்க இயலுமாயிற்று. அந்த பயிற்றசிப் பாடநெறிகள் பினவருமாறு அமையும்.

| | பயிற்சிப் பாடநெறி | பங்கேற்றோர் எண்ணிக்கை | செலவிட்ட பாடநெறிக் கட்டணம |
|---|---|---|---|
| 01. | Proffessional Diploma in Practical Taxation | 02 | 58,000.00 |
| 02. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல் | 02 | 30,000.00 |
| 03. | Advanced MS Excel Skill | 06 | 78,000.00 |
| 04. | Telephone Skill and Etiquett Trainning for Secretaries and Front Office Staff | 01 | 7,500.00 |
| 05. | தகவல் தொழில்நுட்பம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய தேசிய டிப்ளோமா | 03 | 90,000.00 |
| 06. | Certificate in English for Office Management Staff | 02 | 50,000.00 |
| | | | 313,500.00 |

## பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

2023 ஆம் ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.




**HM**

| | |
|---|---|
| பொது முகாமையாளர | 01 |
| பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்) | 01 |
| பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 |
| | 03 |

**MM**

| | |
|---|---|
| உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) | 02 |
| உதவிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் ( தொழிற்பாடுகள் ∴பராமரிப்பு) | 04 |
| உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் ∴ நிருவாகம்) | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (ஒழு-ங்குறுத்தல்) | 01 |
| உள்ளக கணக்காய்வாளர | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (கட்-டிடக் கலை விஞ்ஞானி) | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (வாடி-க்கையாளர் சேவைகள்) | 01 |
| | 12 |

**JM**

| | |
|---|---|
| சிரேட்ட பொறியியல் உதவியாளர் | 05 |
| வாடிக்கையாளர் சேவைகள் உத்-தியோகத்தர் | 02 |
| முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர் | 01 |
| செயலாளர | 02 |
| கணக்கு உத்தியோகத்தர் | 01 |
| உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 |
| நிருவாக உத்தியோகத்தர | 01 |
| | 13 |

**MA**

| | |
|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) | 39 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | 14 |
| பொறியியல் உதவியாளர | 01 |
| | 54 |

**PL**

| | |
|---|---|
| பொறுப்பாளர் | 08 |
| மேசன் | 02 |
| தச்சுத் தொழிலாளி | 02 |
| புத்தகம் கட்டுனர் | 01 |
| சாரதி | 14 |
| அலுவலக உதவியாளர் ∴ தொழிலாளி (பயிற்றப்படாத) | 21 |

# 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மீளாய்வு அறிக்கை

2023 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கை கீழே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கி காணப்பட்டது.

**திருமதி பீ. என் கமகே**
குழுவின் தலைவர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவுசெலவுத் திணைக்களம்
(திறைசேரி பிரதிநிதி)

**திருமதி டபிள்யு. கே. பீ. ரீ. பீ. பர்னாந்து**
குழு அவதானிப்பாளர்
கணக்காய்வு அத்தியட்சகர்
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி பிரதிநிதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம

**பொறியிலாளர் திரு. கே. ஏ. ஜானக்க**
குழு அங்கத்தவர்
பொது முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்பு 02.

**பொறியியலாளர் திரு. ஏ.பி. இர்'ாத**
குழு அங்கத்தவர்
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகரசபை
கொழும்பு
2023.02.23 ஆந் திகதி

**திரு. எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும**
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை

**திருமதி ஜீ.பி.வை. குமாரி**
குழு அவதானிப்பாளர்
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு அலு-வல்கள் இராஜாங்க அமைச்சு

**திருமதி ஆர்.ஏ.எஸ்.எஸ் ரணவீர**
குழு அங்கத்தவர்
நகராட்சி ஆணையாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை

**திருமதி ஏ.என். அமரதுங்க**
குழுத் தலைவர்
கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
(திறைசேரி பிரதிநிதி)

**பொறியியலாளர் திரு. அநுஜ மெண்டிஸ்**
குழு அங்கத்தவர்
பணிப்பாளர் (நகரத் திட்டமிடல்)
பிரதி நகராட்சி ஆணையாளர் சார்பாக
கொழும்பு மாகர சபை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் என்றவகையில் பின்வரும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

**சட்டத்தரணி சரண கருணாரத்ன**
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

**திரு. கே.பி. ஆர் எச். சில்வா**
பதில் பொது முகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

**பொறியியலாளர் திரு. நளீன் கங்கந்த**
பிரதிப் பொதுமுகாமையாளர் (ஒழுங்குறுத்தல்)
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

**திரு. பி. அமில நி'ாந்த**
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை 2023 ஆம் ஆண்டுக்காக 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தி உள்ளதோடு கீழே குறிப்பிடப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுப் பத்திரங்கள் கலந்துரையாடப்பட்டு பணிப்பாளர் சபையின் விதப்புரைக்காக சமர்ப்பிக்கபப்பட்டுள்ளன.

01. 2023.01.27 ஆந் திகதி நடைபெற்ற 62 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்/ அவதானிப்புகள்/ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

1.1 2023.12.21 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.
1.2 2022 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய வங்கி இணக்க விபரம்
1.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவுத் திட்டம்
1.4 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளை உள்ளிட்ட அதன் செயற்பாடுகள் பற்றி தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விபரமான கணக்காய்வு அறிக்கை
1.5 உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள்

02. 2020.06.12 ஆந் திகதி நடைபெற்ற 63 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்.˙. அவதானிப்புகள்.˙. குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

2.1 2022.01.27 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.
2.2 2023 ஜனவரி மாதம் தொடர்பான வங்கி இணக்க விபரம்.
2.3 2022 ஆம் ஆண்டின் முந்திய வருடத்திற்கான சீராக்கமாக ரூ. 2,667,376.16 ஐ பற்றுவைத்தல் மற்றும் ரூ. 976,226.65 ஐ வரவு வைத்தல்.
2.4 2023.01.01 தொடக்கம் 2023.01.31 வரை நிதிசார் செயற்பாட்டு அறிக்கை (வருமானமும் செலவும்)
2.5 2022.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபையின் ஆண்டிறுதிக் கணக்குகள் (நிதிசார் செயலாற்றுகை கூற்று மற்றும் நிதி நிலைமை பற்றிய கூற்று)
2.6 2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை.

03. 2022.05.25 ஆந் திகதி நடைபெற்ற 64 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்/ அவதானிப்புகள்/ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

3.1 2022.05.23 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.
3.2 2023 மார்ச் மாதம் தொடர்பான வங்கி இணக்க விபரம்.
3.3 நிதி ஒழுங்குவிதி 454 இன்படி பொது மாதிரி 44 படிவத்தில் புதிய 03 சரக்குத்தொக்குப் பதிவேடுகள் தொடங்கப்பட்டமை.
3.4 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வருடாந்த அறிக்கையின் வரைவு.
3.5 தேசிய வரவுசெலவு சுற்றிக்கை இலக்கம் 03.˙.2022 இன்படி அதிகாரசபையின் செலவுகளை 37மூ ஆல் முகாமைசெய்துகொள்ளல்.
3.6 2023 சனவரி மாதம் 01 தொடக்கம் 2023 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வரையான நிதிசார் செயற்பாட்டு அறிக்கை (வருமானம் மற்றும் செலவுகள்)
3.7 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள்
64 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நெறிப்படுத்தப்பட்டது.

04. 2023.06.07 ஆந் திகதி நடைபெற்ற 65 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்/ அவதானிப்புகள்/ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

4.1 2023.02.23 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டக் குறிப்புகள் உறுதிப்படுத்தப்பட்டமை.
4.2 2023.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளை உள்ளடக்கியதாக அதன் அலுவல்கள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.
4.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு ஐயவினா.
4.4 2023 சனவரி மாதத்துடன் தொடர்புடைய வங்கி இணக்க விபரம்.
4.5 2022 ஆம் ஆண்டின் முந்திய வருடத்திற்கான சீராக்கமாக ரூ. 2,667,376.16 ஐ பற்றுவைத்தல் மற்றும் ரூ. 976,226.65 ஐ வரவு வைத்தல்.
4.6 2023.01.01 தொடக்கம் 2023.01.31 வரையான நிதிசார் செயற்பாட்டு அறிக்கை (வருமானம் மற்றும் செலவுகள்)
4.7 2022.12.31 ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஆண்டிறுதிக் கணக்குகள் (நிதிசார் செயலாற்றுகை கூற்று மற்றும் நிதி நிலைமை பற்றிய கூற்று)
4.8 2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை.

05. 2023.07.12 ஆந் திகதி நடைபெற்ற 66 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்/ அவதானிப்புகள்/ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

5.1 2023.03.07 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டக் குறிப்புகள் உறுதிப்படுத்தப்பட்டமை.
5.2 2022 வருடாந்த அறிக்கை
5.3 2023.01.01 ஆந் திகதி தொடக்கம் 2023.06.30 ஆந் திகதி வரையான வருமான செலவினக் கணக்கு.
5.4 2023 யூன் மாதம் தொடர்பான வங்கி இணக்கக்கூற்று.
5.5 சிதைவடைந்த பண்டங்களை கையுதிர்த்தல்.
5.6 ஊழியர் சேமலாப நிதியத்திற்கான தொழில்தருனரின் பங்களிப்பினை 15மூ ஆக திருத்தியமைத்தல்.

5.7 2023.06.30ஆந் திகதியிலான மனித வள அறிக்கை

5.8 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு ஐயவினா.

06. 2023.12.07 ஆந் திகதி நடைபெற்ற 67 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அதற்கு அவசியமான விதப்புரைகள்/ அவதானிப்புகள்/ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

6.1 2023.07.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டக் குறிப்புகள் உறுதிப்படுத்தப்பட்டமை.

6.2 2023.01.01 தொடக்கம் 2023.10.30 வரையான நிதிசார் செயற்பாட்டு அறிக்கை (வருமானம் மற்றும் செலவுகள்)

6.3 2023 ஒற்றோபர் மாதம் தொடர்பான வங்கி இணக்கக்கூற்று.

6.4 2024.- 2028 கூட்டுத் திட்டம்

6.5 2024 செயற்பாட்டுத் திட்டம்

6.6 2024 உத்தேச வருடாந்த வரவுசெலவு ஆவணம்

6.7 2024 உத்தேச பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைத் திட்டம்

6.8 2024 அதிகாரத் தத்துவங்களைக் கையளித்தல்.

6.9 2024 உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

6.10 உள்ளக கணக்காய்வு ஐயவினா

6.11 2023.09.30 ஆந் திகதியிலான மனித வள அறிக்கை



வலிமையான முகாமைத்துவ கூட்டுத்தாபனம்
வசதியான வாழ்க்கை முறைக்கான பக்கபலமாகும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கானது

நிதிசார் கூற்றுகள்
முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
முனைப்பழியுள்ள அப்பிபிராயத்திற்கான அடிப்படை
அதிகாரசபையின் 2023 வருடாந்த அறிக்கையில் அடங்கிய தகவல்கள்
நிதிக் கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு
நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை
ஏனைய விடயங்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | HUD/CMA/01/2023/09 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 31st May 2024 |

தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை3

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

.................................................................................................................................................

மேற்படி அறிக்கையும் நற்சாட்சிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரதியொன்றும் இத்துடன் அனுப்பிவைக்க-ப்பட்டுள்ளது.

டப்ளிவ்.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:

1. செயலாளர் , நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
2. செயலாளர், நிதி பொருளாதார உறுதிநிலைப்படுத்துதல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | HUD/CMA/01/2023/09 | |
| ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | |
| දිනය<br>திகதி<br>Date | 31st May 2024 | |

தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

........................................................................................................................................................

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று, நிதிக் கூற்றுகள் பற்றிய குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளிட்ட 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தினதும் எற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கம் நீங்கலாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்வு இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

..................................................

(அ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 03 இன் 47 வது பந்திக்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூ. 2,939,171 பெறுமதியான சாதனங்களில் ரூ. 1,888,677 அளவிலான ஆதனங்களின் பெறுமானம் முந்திய ஆண்டுக்கான மிகைநிலைக்கு சீராக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் தொழிற்பாடுகள் அல்லாத வருமானமாக சீராக்கப்பட்டிருந்தது. அதன்காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அந்த பெறுமதியினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 07

1. தரநியமத்தின் 81 வது பிரிவிற்கு முரணாக அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் கிரயம் ரூ. 729,019 பெறுமதியான நிலையான சொத்துக்கள் விற்பனையில் பிற்பிக்கப்பட்ட இலாபத்திற்கு மேலதிகமாக கிரயத்திற்கு இணையான பணத்தொகை மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்டு தொழிற்பாடுகள் அல்லாத வருமானமாக சீராக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூ. 729,019 அதிகமாக காட்டப்பட்டிருந்ததோடு அதன் பெறுபேறாக மீளாய்வாண்டின் மிகைநிலை அந்த அளவினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

2. தரநியமத்தின் 69 வது பிரிவிற்கு முரணாக நடப்பு வருடத்தில் கொள்வனவுசெய்த ரூ. 1,299,247 பெறுமதியான ஆதனம், சாதனம், பொறித்தொகுதி, அலுவலக வழங்கல் கையிருப்புக் கணக்கில் உள்ளடக்கப்படடிருந்தது. அதனால் அந்த பணத்தொகையால் ஆதனம், சாதனம், பொறித்தொகுதி குறைவாகவும் கையிருப்புகள் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 19 இன் 74 வது பந்திக்கு முரணாக அதிகாரசபையினால் ஊழியர் நன்மை ஒதுக்கீட்டுக் கணக்கின் வித்தியாசமாக அமைந்த ரூ. 9,711,030 ஊழியர் நன்மை மிகை ஒதுக்கீடாக காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக தொழிற்பாட்டுச் செலவுகள் அந்த பெறுமானத்தால் தேறிய மிகைநிலை மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையினால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படவேண்டுமென மதிப்படப்பட்டிரந்த இழப்பீட்டுத் தொகையான ரூ. 3,368,815 மீளாய்வாண்டின் ஊழியர் சம்பளம் மற்றும் ஊதியங்களில் உள்ளடக்கப்படட்டிருந்தபோதிலும் காசுப் பாய்வுக் கூற்றினைத் தயாரிக்கையில் அது பணமல்லாத மாற்றங்களின்கீழ் காட்டப்பட்டிருந்தமையால் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப் பாய்வு ரூ. 3,368,815 ஆல் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(உ) தொழிற்பாடுகள் அல்லாத வருமானமாக ரூ. 138,977,248 காசுப்பாய்வுக் கூற்றில் பணமல்லாத மாற்றங்களில் சீராக்கப்பட்டிருந்ததோடு அதற்குள்ளே ஒதுக்கப்பட்டிருந்த பணிக்கொடை மிகை ஒதுக்கீடு மற்றும் நிலையான சொத்துக்களின் தேய்மானம் மீண்டும் பணமல்லாத மாற்றங்களின்கீழ் காட்டப்பட்டிருந்தமை காரணமாக ரூ. 3,955,836 ஆல் இரட்டைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய காசுப் பாய்வு ரூ. 3, 955,836 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ரூ. 30,481,887 நிலையான வைப்பினை விடுவித்துக் கொண்டமையை முதலீட்டுச் செயற்பாடுகளில் சீராக்கியமையால் தேறிய முதலீட்டுச் செயற்பாடுகள் அந்த பெறுமானத்தினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்ட 04 நிலையான வைப்புக்களின் பெறுமதி அட்டவணைக்கிணங்க ரூ. 506,686,029 என காட்டப்படுவதோடு இறுதிக் கணக்குகளில் ரூ. 508,254,487 என காட்டப்பட்டுள்மையால் ரூ. 1,568,458 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2017 இன் 24 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் 10(ஆ) பிரிவின்படி அதிகாரசபையின் மிகைநிலையைக் கணிப்பிடுகையில் கழிக்கப்பட்ட ரூ. 1,391,557 ஆக அமைந்த உபசரிப்புச் செலவுகளும் ரூ. 265,095 ஆக அமைந்த அருவச் சொத்துக்களின் இலதாக்கலும் ரூ. 38,400 ஆக அமைந்த அபராத வருவாயும் ரூ. 9,711,030 பெறுமதியான ஊழியர் நன்மைகளும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்காக மதிப்பீடுசெய்யப்பட்ட ரூ. 3,368,815 இழப்பீட்டுத் தொகையும் வரி வருமானத்தைக் கணிப்பிடுகையில் மீண்டும் இலாபத்தில் சேர்த்து கணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மூலதனக் கொடுப்பனவு ரூ. 3,383,191 குறைவாக கணிப்பிடப்படடிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் வருமானமான வரி ரூ. 3,417,512 குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஐ) வருமான வரிப்பொறுப்புக்கூறல் கணிப்பிடுதலுக்கிணங்க வருமான வரி ஒதுக்கீடு ரூ. 48,016,852 ஆக அமைந்தபோதிலும் நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் அது ரூ. 44,106,950 எனக் காட்டப்பட்டுள்ளமையால் வருமான வரி ஒதுக்கீடு ரூ. 3,909,902 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டில் செலுத்தவேண்டிய வருமான வரியில் குறைத்துக்கொள்ள இடமளிக்கின்ற ரூ. 7,482,162 பிடித்துவைத்தல் வரித்தொகையை கழித்து ரூ. 28,624,788 பொறுப்பாக காட்டப்பட்டிருப்பினும் அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமம் 01 இன் பிரகாரம் மேற்படி கணிப்பிடலுடன் தொடர்புடைய கணக்குக் குறிப்புகள் மூலமாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நகர அபிவிருத்தி அதிகாரசபை இன்னமும் சொத்துவம் கொண்டுள்ள கதிர்காம சுற்றுலா பங்களா அமைந்துள்ள காணியினதும் மேற்படி கட்டிடத்தினதும் கிரயம் முறையே ரூ. 1,520,000 மற்றும் ரூ. 6,700,000 அதிகாரசபையின் சொத்துக்களாக கணக்குப்பதியப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கெண்டேன். இந்த கணக்காய்வுத் தரநியமங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவையும் உசிதமானவையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3** அதிகாரசபையின் 2023 வருடாந்த அறிக்கையில் அடங்கிய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்த்துள்ள அதிகாரசபையின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் நிதிசார் கூற்றுகள் மற்றும் அவை சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படுகின்றன. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிசார் கூற்றுகள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மூலமாக ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது சம்பந்தமாக எவ்விதத்திலும் உத்தரவாமளித்தலோ அபிப்பிராயம் தெரிவித்தலோ மேற்கொள்ளமாட்டேன். மேலே இனங்கண்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள இயலுமானவிடத்து வாசித்தலும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிசார் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறுவிதமாக பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்தாதுள்ளனவா என்பதை கவனித்துப் பார்த்தலுமே கணக்காய்வுடன் தொடர்புடையதான நிதிசார் கூற்றுகள் சம்பந்தமான எனது பொறுப்பாக அமைகின்றது.

அதிகாரசபையின் 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கையில், அதில் கணியரீதியான தவறாக காட்டப்படல்கள் உள்ளனவென நான் ஊகிப்பேனாயின் சரிசெய்வதற்காக ஆளுகைத் தரப்பினருக்கு அந்த விடயங்கள் அறிவிக்கப்படல் வேண்டும். தொடர்ந்தும் சரிசெய்யப்படாத தவறான காட்டல்கள் இருப்பின், அவை அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுன்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**1.4** நிதிக் கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமாக சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ் கூற்றுகள் அற்றனவாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் அதிகாரசபையை இடையறாமல் பேணிவருவதிலான இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவம் அதிகாரசபையை ஒழிக்க கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி கிடையாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறாமல் நிலவிவருகின்ற அடிப்படையில் கணக்குப் பதிதலும் அதிகாரசபையின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணர்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமாக பரீட்சிப்பதற்கான பொறுப்பினை நிருவகிக்கின்ற தரப்பினர் வகிக்கின்றனர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உட் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் பருவ நிதிக் கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கின்ற வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி கிரமமாக பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணிவரவேண்டும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NAOSL NATIONAL AUDIT OFFICE

## 1.5 நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக கணக்குக் கூற்றுகள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ் கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றபோதிலும் இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கையில் அது எல்லாவேளைகளிலும் கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகளினதும் தவறுகளினதும் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக கணியரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக் கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான அழுத்தத்தின் பேரில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில்வாண்மைசார்ந்த தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்வாண்மைசார்ந்த சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. என்னால் தொடர்ந்தும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடிய அபாயநேர்வினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான எண்ணிக்கைகொண்ட நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளால் ஏற்படுகின்ற அழுத்தத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற அழுத்தம் பலம்பொருந்தியதாக அமையக்காரணம் அவை மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய தவறவிடுதல், தவறுதலாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடு நழுவுதல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கவிளைவு பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ற உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெறப்பட்டது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் புரியப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் இடையறாத வழியுரிமை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை ஈடுபடுத்துவதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மை நிலவுவதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக் கூற்றுகளில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்கள்மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு, மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியதாக அமையாதெனில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் மற்றும் நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை நிறைவடையக்கூடும்.

- நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கி இருக்கின்றதென்பதுவும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி நிருவகின்ற தரப்பினர்களுக்கு விழிப்பூட்டுகிறேன்.

## 2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் அடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கம் நீங்கலாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க, கணக்காய்வுக்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு கிரமமான நிதி அறிக்கைகள் அதிகாரசபையினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) (ஈ) (iii) பிரிவில்ˑ குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க, அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் கடந்த வருடத்துடன் நேரொத்தனவாக அமைகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) (ஈ) (iv) பிரிவில்ˑ குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் கணியரீதியான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கீழே குறிப்பிட்ட வெளிப்பாடுகளை செய்யுமளவுக்கு எனது கவனத்தை ஈர்க்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட

அவசியப்பாடுகளுக்கிணங்க அதிகாரசபையின் ஆளுகைச்சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு அதிகாரசபையுடன் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் எற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது அதிகாரசபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது சிறப்பு ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளதாக.

| சட்டதிட்டங்கள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு | விபரம |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலி'க் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஐஐ வது அத்தியாயாத்தின் 13.3 | பதில்க்கடமை நியமனங்கள் நிரந்தர நியமனமொன்று செய்யப்படும்வரை தற்காலிகமான பரிகாரமாக மாத்திரமே செய்யப்படவேண்டியபோதிலும், அதிகாரசபையின் நிருவாக அலுவல்களைப்போன்றே முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளலுடன் தொடர்புபடுகின்ற பொதுமுகாமையாளர், உதவிப் பொதுமுகாமையாளர் (மனிதவளமும் நிருவாகமும்), உதவிப்பொதுமுகாமையாளர் (தொழிற்பாடுகள்.ˑ.பராமரிப்பு) ஆகிய 03 பதவிகளுக்காக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அதிகாரசபையின் பதில்க்கடமை அடிப்படையில் செயலாற்றி வந்தனர். |

| | | |
|---|---|---|
| (b) | (ஆ) 2021 நவெம்பர் 21 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் 1⁄.2021 ஆம் இலக்கமுடைய தேசிய வரவுசெலவு சுற்றிக்கை | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அமைச்சு அல்லது நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு படிகள், கொடுப்பனவு செலுத்துதலை இடைநிறுத்துதல் மற்றும் பலவிதமாக நலன்புரி மானியங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான புதிய கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளலாகாது. ஆயினும் அதிகார சபையினால் ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்கும் ரூ. 5,000 வீதம் உற்பத்தித்திறன் கொடுப்பனவினை செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பெற்று மீளாய்வாண்டில் அதற்காக ரூ. 3,495,000 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. |
| | | அரச கூட்டுத்தாபனமொன்றின் மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் சம்பந்தமாக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியபோதிலும் மீளாய்வாண்டில் முதலீடுசெய்யப்பட்ட ரூ. 544,601,929 பெறுமதியான 05 நிலையான வைப்புகள் சம்பந்தமாக அவ்விதமாக செயலாற்றப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.
அதிகாரசபைக்கு கிடைத்திருந்த 1387 முறைப்பாடுகளில் 67 முறைப்பாடுகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறைப்பாடுகள் மத்தியில் அத்துமீறிய நிர்மாணிப்புகள் சம்பந்தமான 25 முறைப்பாடுகளும் நீர்க் கசிவு பற்றிய 13 முறைப்பாடுகளும் நிலவின. அவற்றில் 06 முறைப்பாடுகள் கிடைத்து 2 - 5 வருடங்கள் கழிந்திருந்ததன் காரணமாக ஆதனங்களுக்கும் உயிர்களுக்கும் ஆபத்தான நிலைமை நிலவியது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறன்கொண்டதாக மற்றும் ஆக்கவிளைவுமிக்கதாக காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவிக்கப்பட்டிருக்கவில்லை என்பது.

2.3. ஏனைய விடயங்கள்

(அ) அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் கூட்டுத்தொகையாக ரூ. 13,132,807 ஆக அமைந்த கடன்படுனர் மீதி நிலவியது. அதில் ரூ. 9,473,681 பணத்தொகையானது 05 வருடங்களை விஞ்சிய கடன்படுனர் மீதிகளாக அமைந்திருந்தன.
(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் நானாவித கடன்கொடுனர்களாக ரூ. 22,503,432 மீதி நிலவியதோடு அதில் 05 வருடங்களை விஞ்சிய ரூ. 12,430,649 மீதி தீர்க்கப்படாதிருந்தது.

டபிள்யு. பி. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதிசார் அறிக்கைகள

2023 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுகள

நிதிநிலைமைக் கூற்று

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளும் நிதிசார் அட்டவணைகளும்

தேறிய சொத்துக்கள் உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

காசுப்பாய்வுக் கூற்று

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான பெறுமானங்களை இணக்கஞ் செய்வதற்கான பதிவேடு

## 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை பற்றிய கூற்று

| | | 2023 | 2022 | 2023 பாதீடுசெய்த |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா (பின்நோக்கிய செயல்விளைவு கொண்டதாக சரிசெய்யப்பட்ட) | ரூபா |
| சொத்துக்கள் | | | | |
| நிலையான சொத்துக்கள் | | | | |
| நிதி மற்றும் நிதிசார் உருப்படிகள் | குறிப்பு 01 | 41,152,797 | 50,139,292 | 21,500,000 |
| கையிருப்புக் கணக்கு | குறிப்பு 02 | 2,910,529 | 1,603,828 | 900,000 |
| எதிர்காலத்திற்காக செலுத்தியவை | குறிப்பு 03 | 46,752 | 70,232 | 325,000 |
| வர்த்தக கடன்படுனர், ஊழியர் கடன் மற்றும் வருமதியான மீதிகள | குறிப்பு 04 | 20,582,550 | 23,490,926 | 23,140,000 |
| பிற வருமதியான மீதிகள் | குறிப்பு 05 | 14,451,033 | 30,952,511 | 7,500,000 |
| | | **79,143,661** | **106,256,789** | **53,365,000** |
| முதலீடுகள் | | | | |
| நிலையான வைப்பு (மக்கள் வங்கி) | | 441,592,903 | 489,020,089 | 353,945,000 |
| குறுங்கால முதலீடுகள் | குறிப்பு 06 | 18,745,167 | 21,364,943 | 28,500,000 |
| பணிக்கொடை ஏற்பாடுகளின் முதலீடு | | 66,661,584 | 55,581,839 | 76,000,000 |
| | | **526,999,654** | **565,966,871** | **458,445,000** |
| ஆதனம்,சாதனம்,பொறித்தொகுதி | | | | |
| உள்கட்டமைப்பு ஆலை மற்றும் உபகரணங்கள் | குறிப்பு 07 | 22,523,403 | 40,425,172 | 45,768,000 |
| காணியும் கட்டிடங்களும் | குறிப்பு 08 | 3,932,000 | 4,200,000 | 604,200,000 |
| அருவச் சொத்துக்கள் | குறிப்பு 09 | 433,662 | 820,827 | 340,000 |
| | | **26,889,065** | **45,445,999** | **650,308,000** |
| நீண்ட கால முதலீடுகள் | | | | |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பங்குகள் | | 3,000,000.00 | 3,000,000.00 | 3,000,000.00 |
| மொத்த சொத்துக்கள | | **636,032,380** | **720,669,659** | **1,165,118,000** |
| பொறுப்புகள் | | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | | |
| கடன்கொடுனர் / முற்பணம | குறிப்பு 10 | 22,843,078 | 25,123,240 | 1,500,000 |
| அட்டுறு செலவினம் | குறிப்பு 11 | 9,900,615 | 2,786,715 | 3,100,000 |
| சென்மதிகள | குறிப்பு 12 | 3,791,860 | 568,214 | 1,775,000 |
| ஏற்பாடுகள் | குறிப்பு 13 | 29,657,774 | 22,007,856 | 15,680,000 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | | **66,193,327** | **50,486,025** | **22,055,000** |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள | | | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள | | 31,112,220 | 41,477,191 | 40,000,000 |
| குத்தகைக் கடன் - அலுவலகக் காணி | | - | - | 285,000,000 |
| அமைச்சுக் கொடை | | - | 1,888,677 | 1,600,000 |
| எதிர்பாராத பொறுப்புகள | | 3,368,815 | - | - |
| எதிர்பாராத பொறுப்புகள | | **34,481,035** | **43,365,868** | **326,600,000** |
| மொத்தப் பொறுப்புகள | | **100,674,362** | **93,851,893** | **348,655,000** |
| மொத்த சொத்துக்கள் | | **535,358,018** | **626,817,766** | **816,463,000** |

| | 2023 | 2022 | 2023 Budgeted |
|---|---|---|---|
| | Rs. | Rs. (Corrected retrospectively) | Rs. |
| தேறிய சொத்துக்கள் ∴உரிமைப்பங்குகள | | | |
| அங்கீகரித்த மூலதனம் | 500,000 | 500,000 | 500,000 |
| அரசாங்க மூலதனம | 500,000 | 500,000 | 500,000 |
| போனஸ் பங்குகள் | 2,500,000 | 2,500,000 | 2,500,000 |
| | 3,000,000 | 3,000,000 | 3,000,000 |
| கடந்த வருடத்திலிருந்து முன்கொண்டுவந்த மிகைநிலை | 551,817,602 | 505,459,104 | 625,459,000 |
| 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய சீராக்கம | (199,974) | - | - |
| ஆதனம் சாதனம் பொறித்தொகுதி மீள்கணிப்பீட்டு இலாபம் | - | - | 200,000 |
| கழிக்க | | | |
| கடந்த வருடத்திற்கான சீராக்கம் | (167,961,111) | (1,491,176) | (1,500,000) |
| சேர்க்க | | | |
| நடப்பு வருடத்தின் தேறிய மிகைநிலை | 77,430,356 | 47,849,674 | 117,303,000 |
| சேர்த்த நிதியம் | 461,086,873 | 551,817,602 | 741,462,000 |
| மீள்கணிப்பீட்டு ஒதுக்கம | 67,658,482 | 68,387,501 | 68,388,000 |
| பொது ஒதுக்கம் | 1,350,000 | 1,350,000 | 1,350,000 |
| மூலதன மாற்றுதல்கள் | 2,262,663 | 2,262,663 | 2,263,000 |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப்பங்குகளின் கூட்டுத்தொகை | **535,358,018** | **626,817,766** | **816,463,000** |

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2023.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2024.02.28 ஆந் திகதி 176 வது பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுதோடு பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரால் கீழே கையொப்பமிடப்பட்டுள்ளன.
நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தரநியமங்கள் பக்க இலக்கம் 04 தொடக்கம் 09 வரையிலும் குறிப்புகள் பக்க இலக்கம் 10 தொடக்கம் 16 வரையிலும் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்படி நிதிக்கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பினை அதிகாரசபையின் முகாமைத்துவச் சபை வகிக்கின்றது.

பீ. அமில நி'ாந்த
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கே.பி.ஆர்.எச். சில்வா
பொது முகாமையாளர
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

ஏ.என். அமரதுங்க
மேலதிக பணிப்பாளர நாயகம்∴ கணக்காய்வு மற்றும
முகாமைத்துவ குழுத் தலைவரவ
தேசிய வரவு செலவுத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிநிலை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

சட்டத்தரணி சரண குணவர்தன
தலைவர
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசைபை

# கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
# 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான
# நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | குறிப்பு | 2023 | 2022 | 2023 பாதீடுசெய்த |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா (பின்நோக்கிய செயல்விளைவு கொண்டதாக சரிசெய்யப்பட்ட) | ரூபா |
| வருமானம் | | | | |
| தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 14 | 178,381,286 | 189,943,221 | 253,356,000 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 15 | 5,434,370 | 2,634,000 | 2,061,000 |
| தொழிற்பாடு அல்லாத வருமானம | குறிப்பு 16 | 138,927,248 | 104,704,856 | 180,960,000 |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம | | **322,742,904** | **297,282,077** | **436,377,000** |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | | | | |
| ஊழியர் சம்பளமும் படிகளும் | குறிப்பு 17 | 102,125,397 | 108,926,694 | 115,568,000 |
| பிரயாணச் செலவுகள் | குறிப்பு 18 | 641,872 | 540,052 | 1,080,000 |
| வழங்கலும் நுகர்வுப் பொருட்களும | குறிப்பு 19 | 10,560,964 | 6,886,661 | 9,800,000 |
| பராமரிப்புச் செலவுகள | குறிப்பு 20 | 10,655,576 | 5,669,633 | 9,350,000 |
| நியதிச்சட்டமுறையான செலவுகள | குறிப்பு 21 | 15,767,751 | 14,561,161 | 18,475,000 |
| நேரடியான செலவுகள | குறிப்பு 22 | 4,316,108 | 4,431,883 | 5,050,000 |
| நிலையான சொத்துக்கள் தேய்மானம | | 19,519,415 | 20,420,233 | 20,918,000 |
| அருவச்சொத்துக்கள் இலதாக்கல் | | 265,095 | 246,365 | 500,000 |
| பிற தொழிற்பாட்டுச் செலவினங்கள | குறிப்பு 23 | 1,822,624 | 2,684,890 | 55,850,000 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள | | **165,674,802** | **164,367,572** | **236,591,000** |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் - மிகைநிலை | | 157,068,102 | 132,914,505 | 199,786,000 |
| நிதிசார் செலவுகள் | குறிப்பு 24 | 1,457,534 | 1,102,031 | 10,375,000 |
| தொழிற்பாடு அல்லாத செலவுகள | குறிப்பு 25 | 1,097,623 | 753,002 | 2,420,000 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மீதான மொத்த | | **2,555,157** | **1,855,033** | **12,795,000** |
| செயல்பாட்டு நடவடிக்கைகளில் உபரி | | 154,512,945 | 131,059,472 | 186,991,000 |
| பாவனையிலிருந்து அகற்றிய பொருட்கள் விற்பனையிலான மிகைநிலை மேலவந 26 | | 208,800 | - | 250,000 |
| வரி குறைக்கப்பட முன்னர் தேறிய மிகைநிலை | | 154,721,745 | 131,059,472 | 187,241,000 |
| வருமான வரி ஏற்பாடுகள | | 44,106,950 | 33,209,798 | 44,938,000 |
| அரசாங்க இறுப்பனவு வரி | | 33,184,439 | 50,000,000 | 25,000,000 |
| தேறிய மிகைநிலை | | **77,430,356** | **47,849,674** | **117,303,000** |
| கடந்த வருடத்தில் முன்கொண்டுவந்த சேர்ந்த மிகைநிலை | | 538,353,155 | 492,194,630 | - |
| திரண்ட மிகைநிலை | | **615,783,511** | **540,044,304** | **117,303,000** |
| முந்திய வருடத்துடன் தொடர்புடைய சீராக்கல்கள | | | | |
| பற்று கூட்டுத்தொகை | | 167,961,111 | 1,491,175 | - |
| வரவுக் கூட்டுத்தொகை | | - | - | - |
| | | **447,822,400** | **538,553,129** | **117,303,000** |

# கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள

பொதுவாக எற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமங்களைத் தெரிவுசெய்தமை ஊடாக சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் நியாயமான வகையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்து இந்த கணக்குக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ் கூற்றுகள் அற்றனவாக சிறந்த உள்ளக கட்டுப்பாட்டினை திட்டமிடுதல் மற்றும் அதனை அமுலாக்குதலும் பேணிவருதலும் ஊடாக நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துகிறோம்.

## 1 கணக்கீட்டுக் கொள்கைகள்

எற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக அன்னியோன்னியரீதியாக காலப்பகுதிகள் பற்றிய இடைத்தொடர்பு கொண்டதாக வரலாற்றுரீதியான வருமான அடிப்படையில் அதிகார சபையின் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிதிசார் கொள்கைகளில் தாக்கமேற்படுத்தக்கூடிய பணவீக்கம்சார்ந்த காரணிகளுக்காக சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அட்டுறு அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2 அதிகாரசபையின் இடஅமைவு

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை, கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்த, தேசிய வீடமைப்புத் திணைக்களக் கட்டிடத்தில் அமைந்துள்ளதோடு முழுத்தீவினையும் உள்ளடக்கத்தக்கவகையில் கூட்டாட்சி ஆதனங்கள் பற்றிய ஒழுங்குறுத்தல் பணிகளை ஈடேற்றிவருகின்றது.

## 3 அதிகாரசபையின் சட்டமுறையான தன்மை

2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தம்) சட்டத்தினால் கிடைத்துள்ள தத்துவங்களுக்கிணங்க கூட்டாட்சி ஆதனங்களின் பொதுவசதிகள் மற்றும் பொது அம்சங்களின் பராமரிப்பு, நிருவாகம் மற்றும் கட்டுப்பாட்டுக்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுதலும் அவற்றை ஒழுங்குறுத்துதலும் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிக்கையில் மேற்படி ஆதனங்களுடன் தொடர்புடைய பொது வசதிகளை தரப்பினர்களின் அவசியப்பாடுகள் ஈடேறத்தக்கவகையில் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதும்

## 4 அதிகாரசபையின் செயற்பாடுகளுடன் ஏற்புடையதாகின்ற சட்டங்கள்

- 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தம் ) சட்டம்
- 1982 இன் 46 ஆம் இலக்க பொது வசதிகள் சபை சட்டம்
- 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தம் ) சட்டம்
- 1973 இன் 11 ஆம் இலக்க இணைந்த வீடுகள் சட்டம்
- 1982 இன் 45 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம் ) சட்டம்
- 1999 இன் 04 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை சிறப்பேற்பாடுகள் சட்டம்
- 2003 இன் 39 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம் ) சட்டம்

## 5 நிதிசார் காலப்பகுதி

அதிகார சபையின் நிதிசார் காலப்பகுதியாக அமைவது 2023 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரையான 12 மாதங்களாகும்.

## 6 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

**6.1** ஐஇலங்கை அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கொள்வனவின்போது அதிகாரசபையின் உள்ளக நிதியங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. மேலும், நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுதல் மற்றும் சமுதாய துப்பரவேற்பாடு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நன்கொடையாகக் கிடைத்த கிரயப் பெறுமதி ரூ. 2,939,171.25 ஆக அமைந்த மேற்படி ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளை 2021 ஆம் ஆண்டிலிருந்து 05 வருடங்களில் மதிப்பிறக்கம்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இது இலங்கை அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமம் 11 இன் 44 வது பந்திக்கு முரணானதென கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் நடைமுறையல்லா பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்த ரூ. 1,888,677.14 மீதி நடப்பு வருட இலாபத்தில் சீராக்கப்பட்டுள்ளது.

ஆதனம், சாதனம், பொறித்தொகுதிக்கான தேய்மான ஒதுக்கீட்டின்போது அதிகாரசபையின் கொள்கைக்கிணங்க கொள்வனவுசெய்த தினத்திலிருந்து விற்பனை செய்யப்படுகின்ற திகதி வரை எளிய நேர்கோட்டு வழிமுறையின்படி தேய்மான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கருவிகள் மற்றும் உபகரணங்களுக்காக மாத்திரம் 1மூ இடிபாட்டுப் பெறுமானம் கழிக்கப்பட்ட பின்னர் தேய்மான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் வாகனம | - | கிரயத்தின் பேரில | 25% |
| அலுவலக தளபாடங்களும் உபகரணங்ளும | - | கிரயத்தின் பேரில | 20% |
| இயந்திரங்களும் உபகரணங்களும | - | குறைக்கப்பட்ட மதிப்புக்கு மதிப்பு | 20% |
| சாதனங்களும் உபகரணங்களும | - | கிரயத்தின் பேரில | 20% |
| கட்டிடங்கள | - | கிரயத்தின் பேரில | 04% |

2023.12.31 ஆந் திகதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ளபோதிலும் தற்போதும் பாவிக்கப்பட்டு வருகின்ற ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிப் பெறுமானம் ரூ. 5,991,767.19 ஆகும். இலங்கை அரச பிரிவு கணக்கீட்டுநியமம் 07 இன் 65 வது பந்திக்கிணங்க சொத்தொன்றின் துணைநிலை பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியினதும் இறுதியில் மீளாய்வுசெய்யப்பட்டு ஏற்புடைய வித்தியாசம் அரச பிரிவு கணக்கீட்டுநியமம் 03 இன் பிரகாரம் கணக்குப்பதியப்பட வேண்டுமென்பதால் மேற்படி ஆதனத்தையும் சாதனத்தையும் மீள்கணிப்படு செய்யுமாறு அரசாங்க விலைமதிப்பிட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதிலும் காணிகளையும் கட்டிடங்களையும் மாத்திரம் விலைமதிப்பீடு செய்வதாக பிரதம விலைமதிப்பீட்டாளர் அறிவித்துள்ளார். அதற்கிணங்க ஆதனம் சாதனம் பொறித்தொகுதிகளில் இயந்திரசாதன தொகுதியை மீள்கணிப்பீடுசெய்ய 2024 ஆம் ஆண்டில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கொம்ப்றோட்டல் ஜெனரல் அலுவலகத்தினால் 2018.12.31 ஆந் திகதிகொண்டதாக வெளியிடப்பட்ட நிதியல்லாத சொத்துக்களை மதிப்பீடுசெய்வதற்கான வழிகாட்டிக்கிணங்க நிறைவேற்று அதிகாரியையும் உள்ளடக்கிய மூவரடங்கிய குழுவினால் தற்போது மீள்கணிப்பீடு செய்யப்பட்டு வருவதோடு அந்த அறிக்கைகிணங்க 2024.01.01 திகதியன்று இயந்திவாதன தொகுதியில் மதிப்பட்டுப் பெறுமானங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

**6.2** அருவச் சொத்துக்கள

தனித்தனியாக கையகப்படுத்திய அருவச்சொத்துக்கள் கிரயத்தில் அடிப்படை இனங்காணலின்பேரில் அளவீடு செய்யப்படுவதோடு அருவச் சொத்துக்கள் வருடந்தோறும் 20மூ இல் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

## 7 பணிக்கொடை

அதிகாரசபையில் பணியாற்றி வருகின்ற அனைத்து ஊழியர்களினதும் பணிக்கொடை கொடுப்பனவிற்காக அவர்களின் சேவைக்காலத்தை அடிப்படையாககொண்டு கணக்குகளில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மேற்படி பெறுமதி ரூ. 31,112,220.00 ஆக அமைவதோடு அதற்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயுட்கணிப்பு மதிப்பீடு தொழில்வாண்மைரீதியாக தகைமைபெற்ற மதிப்பிட்டாளரொருவர் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருவதோடு ஒவ்வோராண்டிலும் ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை மேற்கொள்ள அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின்படி இடையறாத 05 வருட சேவைக்காலத்தை நிறைவுசெய்த பின்னர் மாத்திரமே பொறுப்பு தொடங்குகின்றது. அத்துடன் இந்த பணிக்கொடை பொறுப்பினைத் தீர்த்துக்கொள்வதற்காக போதியளவு பணத்தை 2023 திசெம்பர் 31 ஆந் திகதியாகும்வேளையிலும் நிலையான வைப்புக்கள் என்றவகையில் முதலீடுசெய்யவும்

## 8 கையிருப்புகள்

கொள்வனவுக் கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் எது குறைவானதோ அந்த பெறுமானத்தின் அடிப்படையில் மீள்கணிப்பீடுசெய்து கணக்குகளில் கையிருப்புக்கள் சீராக்கப்பட்டுள்ளதோடு எந்தவிதமான இலாப சதவீதமும் உள்ளடக்கப்படவில்லை. மீளாய்வாண்டில் களஞ்சியப் பொருட்களின் நிகர தேறிய பெறுமதி வழங்கலாளர்களிடமிருந்து எழுத்தில் பெறப்பட்டுள்ளது.

## 9 வருமானம்

nkhj;j tUkhdj;ij mbg;gilahff;nfhz;L ,yhgel;lf; fzf;F jahupf;fg;gl;Ls;sJ.

## 10 அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன்

